Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 ஆவணி 03 வெள்ளிக்கிழமை (19.08.2011) பக்கங்கள் 16 ஓசை – 324

ராம்கோ MADRAS CEMENTS LTD RAMCO
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/848)



அரசுக்கு காலக்கெடு விதிக்கவில்லை (08)




(11)



ராணாவில் மீண்டும் ரஜினி (12)



ஆளுமை உள்ள சமூகம் உறவாக... (04)

# யுத்தம் தந்த விதவைகள் கனேடிய அரசு நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

வடக்கில் யுத்த அனர்த்தங்களில் கணவனை இழந்து விதவைக ளாக்கப்பட்ட பெண்களையும் யுத்தத்தின் போது காயமடைந்து அங்கவீனமான பெண்களையும் மையமாக வைத்து புதிய புனர்வாழ்வுச் செயற்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இப்புதிய புனர்வாழ்வுச் செயற்திட்டத்துக்கு கனேடிய அரசாங்கம் நிதியுதவி வழங்க முன்வந்துள்ளது.

மாவட்ட ரீதியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற பாதிக்கப்பட்ட பெண்கள் தொடர்பிலான கண்காட்சிகள் மற்றும் பொது தெளிவூட்டல்கள் போன்ற நடவடிக்கைகளுக்கும் கனடா ஒத்துழைப்பு வழங்கவுள்ளதாக கனேடிய தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இதனடிப்படையில் இந்த நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் 2.5 மில்லியன் ரூபா நிதியுதவியை வழங்க கனடா தீர்மானித்துள்ளது.

முதற்கட்டமாக வடபகுதியின் யாழ். நகரிலும் கிழக்கல் மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய இரு நகரங்களிலும் இது தொடர்பான இரண்டு நாள் கண்காட்சிகள் நடாத்த இந்த நிதியுதவி பயன்படுத்தப்படவுள்ளது.

அத்துடன், இந்தக் கண்காட்சியின் போது சுமார் 50 பேருக்கான தமிழ் மற்றும் சிங்கள மொழிமூலமான இரண்டு நாள் பயிற்சிக் கருத்தரங்குகளையும் நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளதாக கனேடிய தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## இலத்திரனியல் அடையாள அட்டை
### விரைவில் அறிமுகம்

(கொழும்பு)

ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் தேசிய அடையாள அட்டையை இலத்திரனியல் முறையில் மாற்றுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதற்கு அமைச்சரவை அங்கீகாரமளித்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## ஐ.நா.உதவி தொடரும்

(கொழும்பு)

இலங்கையில் எஞ்சியிருக்கும் மனிதாபிமானத் தேவைகளை நிறைவேற்றும் முயற்சிகளில் ஐக்கிய நாடுகள் சபை தொடர்ந்தும் உதவி செய்யவுள்ளது என உலக மனிதாபிமான தின கொண்டாட்டங்களை முன்னிட்டு இலங்கைக்கான மனித நேய இணைப்பாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

நிலைத்து நிற்கக்கூடியதும் நிலைபேறானதுமான சமாதானத்திற்கு அத்தியாவசியமானதென நாம் கருதும் நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கத்திற்கு உதவி செய்யக்கூடிய வாய்ப்

(15ஆம் பக்கம் பார்க்க)

# ஆசிரியர் வெற்றிடம் நிரப்ப நடவடிக்கை
## தீவகத்துக்கு விமோசனம்

(யாழ்ப்பாணம்)

தீவுப் பகுதி கல்வி வலயப் பாடசாலைகளில் நிலவும் ஆங்கில மற்றும் கணித, விஞ்ஞான ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு வடமாகாணக் கல்வித் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக வடமாகாண கல்வியமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இதற்கென ஒப்பந்த அடிப்படையில் ஆங்கில மற்றும் கணித, விஞ்ஞான ஆசிரியர்களுக்கான விண்ணப்பங்கள் வடமாகாண கல்வியமைச்சினால் கோரப்பட்டுள்ளதாகவும் அவ்அதிகாரி தெரிவித்துள்ளார்.

கணிதம், விஞ்ஞானப் பாடங்களுக்கான ஆசிரியர்கள் பட்டதாரிகளிடம் இருந்தும், ஆங்கிலப் பாட ஆசிரியர்கள் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கிலத்தில் 'ஏ' அல்லது 'பி' சித்தி பெற்றிருப்பவர்களிடம் இருந்தும் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இவ் ஆசிரிய வெற்றிடத்திற்கான விண்ணப்பப் படிவங்களை விண்ணப்பதாரிகள் வடமாகாண கல்வியமைச்சின் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள முடியும். இவ்விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்து எதிர்வரும் 26ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டும் எனவும் வடமாகாண கல்வித் திணைக்கள அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (பா)

## குளிர்பான விற்பனை வர்த்தகருக்கு தண்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர்ப் பகுதியில் வர்த்தக நிலையங்களில் காலாவதியான சோடா விற்பனை செய்து வந்த நபர்களுக்கு 4 ஆயிரத்து 500 ரூபா அபராதம் யாழ்.நீதிமன்றம் விதித்துள்ளது.

இவ்வழக்கினை விசாரித்த யாழ்.நீதிமன்ற நீதிபதி ஏ.ஆனந்தராஜா, காலாவதியான சோடா விற்பனை செய்த நபருக்கு 3 ஆயிரம் ரூபா தண்டமும், வரையறுக்கப்பட்ட விலைக்கு அதிகமான விலையில் சோடா விற்பனை செய்தமைக்கு ஆயிரத்து 500 ரூபாவும் செலுத்த வேண்டுமெனத் தீர்ப்பு வழங்கினார்.

தண்டம் செலுத்தத் தவறின் ஒரு மாத கால சாதாரண சிறைத் தண்டனை எனவும் தீர்ப்பளித்தார்.

# அரசு – கூட்டமைப்பு பேச்சு அடுத்த கட்டம் என்ன?

(கொழும்பு)



இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்த அரசுடனான பேச்சுக்கள் தொடர்பாக அடுத்த கட்ட நடவடிக்கை என்ன என்பது குறித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று முடிவு செய்யும் என்று கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

கூட்டமைப்பு விதித்த நிபந்தனைகள் குறித்த அரசு இதுவரையில் பதில் வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் அரசாங்கத்துடனான அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் நாளைய தினம் தீர்மானம் மேற்கொள்ளப்படும் என தமிழ் தேசிய கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தன் இன்று நாடு திரும்புகிறார். நாளைய தினம் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாழ்ப்பாணத்தில் கூடவுள்ளனர். இதன்போது இது குறித்து தீர்மானம் மேற்கொள்ளப்படும் என கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.


# கிளிநொச்சி கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்கள் தெரிவு இடம்பெறுகிறது

(கிளிநொச்சி)

மீள்குடியேற்றம் நிறைவடைந்த வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் 181 கிளைகளுக்கு 2010 ஆம் ஆண்டு முதல் முறைப்படி நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டு வருகின்றனர்.

வவுனியா, மன்னார் மாவட்டங்களின் தேர்தல்கள் பூர்த்தியடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தில் முதற்கட்டமாக உரிய சட்டதிட்டங்களுக்கமைய இப் பல நோக்குக்கூட்டுறவுச் சங்கங்களின் கிளைகளுக்குரிய நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு செய்தல் இடம்பெறுகின்றது. தொடர்ந்து கூட்டுறவுச்சங்கங்களுக்கு நிர்வாக சபையைத் தெரிவு செய்யும் தேர்தல் கூட்டுறவு உதவி ஆணையாளர் தலைமையில் நடைபெறும் என உள்ளூராட்சி அமைச்சு விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்பு நிலவிய அசாதாரண சூழ்நிலையில் சங்க அலுவலர்களே சங்கங்களை நிர்வகித்தமை குறிப்பிடத்தக்கது.



# இலங்கை, இந்திய மீனவர் பிரச்சினை ஆலோசனைக் கூட்டம் டெல்லியில்
## காங்கிரஸ் எம்.பி. சுதர்சன நாச்சியப்பன் ஏற்பாடு

இந்திய, இலங்கை மீனவர்கள் உறவு மற்றும் பிரச்சினை குறித்த ஒரு ஆலோசனைக் கூட்டம் ஒன்றை காங்கிரஸ் எம்.பி. சுதர்சன நாச்சியப்பன் டெல்லியில் ஏற்பாடு செய்துள்ளார்.

இந்தக் கூட்டத்திற்கு பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களை அவர் அழைத்துள்ளார். இலங்கையில் நடந்த இனப்படுகொலை குறித்த விவாதம் ராஜ்யசபாவில் அடுத்த வாரம் வரும் நிலையில் சுதர்சன நாச்சியப்பன் ஏற்பாடு செய்துள்ள இந்தக் கலந்துரையாடல் சந்தேகங்களை எழுப்புவதாக இந்தியப் பத்திரிகைகள் கூறியுள்ளன.

# வேட்புமனுத் தாக்கல் ஆரம்பம்

(கொழும்பு)

எஞ்சிய 23 உள்ளூராட்சி சபைகளுக்குமான வேட்புமனு தாக்கல் செய்யும் நடவடிக்கைகள் நேற்று முதல் ஆரம்பமாகியது. மாவட்டச் செயலாளர் அலுவலகங்கள் ஊடாக வேட்புமனுக்களை இந்த மாதம் 25 ஆம் திகதி வரையில் தாக்கல் செய்ய முடியும்.

23 உள்ளூராட்சி சபைகளிலும் போட்டியிடும் சுயாதீன குழுக்கள், தமது கட்டுப்பணத்தை இந்த மாதம் 24 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னர் செலுத்த வேண்டும் எனத் தேர்தல் செயலகம் அறிவித்துள்ளது.

அவசர கால சட்டத்தின் கீழ் ஒத்திவைக்கப்பட்ட 17 மாநகர சபைகள், ஒரு நகரசபை மற்றும் 5 பிரதேச சபைகளுக்கான தேர்தல்கள் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



மேலும் 10 ஆறுதல் பரிசுகள்
பரிசில்களை வென்றிட
விபரங்கள் 14 ஆம் பக்கத்தில்

# பெண் தலைமைக் குடும்பங்களுக்கு புதிய வாழ்வாதார செயற்திட்டம்

போரினால் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பங்களின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கத்துடனும், மீள்குடியேறிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் தொடர்பான பெண்களுக்கான செயற் திட்டம் ஒன்று வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

விதைநெல் உற்பத்தி, நன்னீர் மீன்பிடி ஆகிய இத்திட்டங்களில் பெண்களின் பங்களிப்பு மற்றும் வருமானத்தை ஈட்டிக்கொள்ளும் நோக்குடன் நோர்வே தூதரகத்தின் நிதி உதவியுடன் சேவா லங்கா மன்றம் இச்செயற்பாட்டை மேற்கொண்டு வருகின்றது.

வடக்கு மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட நான்கு மாவட்டங்களில் உள்ள பிரதேச செயலக பிரிவுகளில் அடங்கும் கிராம சேவையாளர் பிரிவுகளில் வாழும் பெண் தலைமைத்துவ குடும்பங்களே தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

2010 டிசம்பர் மாதம் தெரிவு செய்யப்பட்ட இத்திட்டங்கள் 2013 டிசம்பர் வரை நடைபெறவுள்ளது.

இத்திட்டங்கள் வவுனியா மாவட்டத்தில் வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள 6 கிராம சேவையாளர் பிரிவுகளிலும், முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள 2 கிராம சேவையாளர் பிரிவுகளிலும், கிளிநொச்சி மாவட்டம் கண்டாவளை, கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள 4 கிராம சேவையாளர் பிரிவுகளிலும், மன்னார் மாவட்டம் மடு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள 12 கிராம சேவையாளர் பிரிவுகளிலும் இத்திட்டங்ள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (எஸ்)

## பல்கலைக்கழக மாணவர்கள் கைது

(கொழும்பு)

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தில் இடம்பெறவுள்ள நிகழ்ச்சி ஒன்றுக்கு உண்டியல் மூலம் நிதி சேகரித்த 6 மாணவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

களனி பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இம்மாணவர்களில் 2 பிக்குகளும் அடங்கும்.

பல்கலைக்கழகங்களில் குறிப்பிட்ட நிகழ்ச்சிக்கு ஒதுக்கப்படும் நிதி போதாமையால் மாணவர்கள் வீதிகளில் இறங்கியதாக அனைத்து பல்லைக்கழக மாணவர் ஒன்றிய சஞ்சீவ பண்டார தெரிவித்தார்.

## இளம் யுவதி கைது

இலண்டனில் இருந்து இலங்கைக்கு வந்த தாயும் மகளும் குற்றப்புலனாய்வுப் பிரிவால் கொழும்பில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பிரித்தானிய பிரஜையான வாசுகி கருணாநிதி என்பவரே இவ்வாறு 14 நாட்களுக்கு முன் கைதுசெய்யப்பட்டவராவார். மகள் விடுவிக்கப்பட்ட நிலையில் வாசுகியின் விடுதலை குறித்து எந்தத் தகவலும் வெளியிடப்படவில்லை. பிரித்தானியாவில் இடம் பெற்ற போராட்டங்களில் இவர் பங்குபற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவரது கைது குறித்து இலங்கைக்கான பிரதி பிரித்தானிய தூதுவர் அரச அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியுள்ளார்.

## விலைப்பட்டியல் பார்வைக்கு இல்லையேல் சட்டநடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். நகர் பகுதியில் வர்த்தக நிலையங்களில் விலைப்பட்டியல் இன்றி பொருட்கள் விற்பனை செய்துவந்த வர்த்தகர்கள் மூவருக்கு 4500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இவ்வழக்கை விசாரணை மேற்கொண்ட யாழ். நீதிமன்ற நீதிபதி ஏ. ஆனந்தராஜா மூவருக்கும் தலா 1500 அபராதம் விதித்ததுடன், தண்டம் செலுத்தத் தவறின் 3 மாதகால சாதாரண சிறைத்தண்டனையும் அனுபவிக்கக் கோரி உத்தரவிட்டார். (எஸ்)

## சுயதொழில் கடன் "நிஸ்கோ" ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் நிஸ்கோ பிரிவினரால் மிகக்குறைந்த வட்டியில் சுய தொழில் கடன் வழங்கப்படவுள்ளது.

மேற்படி கடன் வேலையற்ற இளைஞர் யுவதிகளுக்கு சுய தொழிலை ஊக்குவிக்கும் நோக்குடன் இந்த சுயதொழில் கடன் வழங்கப்படவுள்ளது.

இக்கடனைப் பெற விரும்புபவர்கள் ப.பஞ்சலிங்கம் பொது முகாமையாளர் (நிஸ்கோ) தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், வீடமைப்புக் கட்டடம் யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு தாமாகத் தயாரித்த விண்ணப்பப் படிவத்தினை இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (நி)

## கணினிக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

நுட்பம் தமிழ் தகவல் தொழில நுட்ப அமையத்தின் மாதாந்த முழுநிலா கருத்தரங்கின் முதலாவது கருத்தரங்கு பருத்தித்துறை பிரதேச செயலக விதாதா வள நிலையத்தின் அனுசரணையுடன் பருத்தித்துறை பிரதேச செயலக மண்டபத்தில் 'கணினியில் தமிழ் - சவால்களும் தீர்வுகளும்' என்ற தலைப்பில் நாளை காலை 10 மணி தொடக்கம் 11.30 மணி வரை நடைபெறும்.

நிகழ்வில் செய்முறை விளக்கங்கள், விபரணங்களும் காட்டப்படவுள்ளன.

சகல ஆர்வலர்களையும் கலந்துகொள்ளுமாறு நுட்பம் அமையம் கேட்டுக்கொள்கிறது.

## சமய அறிவுப் போட்டி மாணவர்களுக்கு பரிசில்

(வேலணை)

வேலணை பெருங்குளம் அருள்மிகு முத்துமாரி அம்மன் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு வேலணை இந்து இளைஞர் மன்றமும், இந்து வளர்ச்சிக் கழகமும் இணைந்து யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள சிறிமதனன் மற்றும் அதன் கிளை ஸ்தாபனமான மதனன் நகையகத்தினரின் ஆதரவுடன் நடத்திய சைவசமய அறிவுப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்கள் இன்று காலை வேலணை பெருங்குளம் அருள்மிகு முத்துமாரி அம்மன் ஆலய மண்டபத்தில் வைத்து வழங்கப்படவிருக்கிறது. (05)

## பொதுக்கூட்டம்

(நெல்லியடி)

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 23 ஆம் திகதி அநுராதபுரத்தில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (12)

## புகைபிடித்தல் காட்சிகள் புதிய விதிகள் அமுல்

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் போது தோன்றும் புகை பிடிக்கும் காட்சிகளை மறைக்கும் முறை செப்டெம்பர் முதலாம் திகதி முதல் முற்றாக நீக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதற்கு பதிலாக புதிய நடைமுறை அடுத்த மாதம் முதல் அமுலுக்கு வருவதாக புகை பிடித்தல் மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகார சபையின் தலைவர் பேராசிரியர் கார்லோ பொன்சேகா தெரிவித்தார்.

பழைய முறைமை நீக்கப்படுகின்ற போதிலும் முதலாம் திகதி முதல் புதிய முறைமை நடைமுறைக்குக் கொண்டுவரப்படுகிறது. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் புகைப்பிடித்தல் காட்சிப்படுத்தப்படும் சமயங்களில் இதனால் ஏற்படும் பாதிப்புக்கள் பற்றிய எச்சரிக்கை அறிவிப்புகள் காண்பிக்கப்படும்.

புகைபிடித்தல் பழக்கத்திலிருந்து இலங்கையை விடுவிப்பதற்காக உழைத்துவரும் ஜீவக்க மன்றம் ஒழுங்கு செய்திருந்த செய்தியாளர் மாநாட்டின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

## கொள்ளைச் சம்பவங்கள் அதிகம் பொலிஸார் எச்சரிக்கை

(அம்பலப்பெருமாள்)

வவுனியாவில் கொள்ளையர்களின் கைவரிசை அதிகரிப்பதால் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும் என வவுனியா பொலிஸார் பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

இரவு வேளைகளில் கொள்ளையர்கள் களவு முயற்சியில் ஈடுபடுவதாகவும், பொதுமக்கள் தமது உடைமைகளைப் பாதுகாப்பாக வைப்பதுடன் விழிப்புடன் செயற்படுமாறும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (121)




## தெய்வீக இசையரங்கு

நல்லூர் கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு இளங்கலைஞர் மன்றத்தினால் தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்கர்தேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் தினமும் மாலை 6.30 மணிமுதல் 8.00 மணிவரை தெய்வீக இசையரங்கு நடைபெற்றுவருகிறது.

இதில் 16 ஆம் திருவிழாவான இன்று வி.சிவஞானசேகரத்தின் பாட்டுக் கச்சேரியில் வயலின் - எஸ்.கோபிதாஸ், மிருதங்கம் - எஸ்.துரைராசா, முகர்சிங் - எஸ்.செந்தூரன் ஆகியோர் பக்கவாத்தியக் கலைஞர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

❖ ❖ ❖ ❖

## ஆன்மீகச் சொற்பொழிவுகள்

நல்லூர் ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு சொண்ட் நிறுவனத்தின் அனுசரணையுடன் 63 நாயன்மார் மண்டபத்தில் தினமும் மாலை 6.30 மணிக்கு நடைபெற்றுவரும் ஆன்மீகச் சொற்பொழிவில் 12 ஆம் திருவிழாவான இன்று 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்னும் பொருளில் சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரன் சொற்பொழிவாற்றவுள்ளார்.

❖ ❖ ❖ ❖

நல்லூர் ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் தினமும் பிற்பகல் 3 மணிமுதல் 6 மணிவரை நடத்தும் சமயச் சொற்பொழிவு மற்றும் கலை நிகழ்வுகளில் இன்று 'கண்ணப்பன் கண்ட பக்தி' என்னும் பொருளில் சிவ உமாசுதன் சொற்பொழிவாற்றவுள்ளார்.

தொடர்ந்து கலைநிகழ்வுகளில் தெல்லிப்பளை துர்க்கை அம்மன் அறநெறிப் பாடசாலை, அளவெட்டி காமாட்சி அம்பாள் அறநெறிப் பாடசாலை ஆகிய பாடசாலை மாணவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.




**ரஸூல் (ஸல்) கூறியுள்ளார்கள். லைலதுல் கத்ர் இரவு ரமழான் மாதத்தின் கடைசி பத்து நாட்களின் ஒற்றைப்படையான இரவான 21, 23, 25, 27, 29 ஆகிய ஏதேனும் ஓர் இரவில் இருக்கின்றன. அவ்விரவு மிகவும் பிரகாசமானதாகவும், தெளிவானதாகவும், அமைதியானதாகவும், அதிக உஷ்ணமோ, அதிக குளிரானதாகவோ இருக்காது என நபி (ஸல்) அருளியுள்ளார்கள். (105)**

## மாகியப்பிட்டி வீதி புனரமைப்பு எப்போது?

(சுன்னாகம்)

சுன்னாகத்தில் இருந்து மாகியப்பிட்டி வரையான வீதி பல வருடங்களாகப் புனரமைக்கப்படாத நிலையில் பலத்த சேதமுற்று காணப்படுவதாக அவ் வீதியால் பயணிக்கும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

குண்டும் குழியுமாகக் காணப்படும் இவ்வீதி இதுவரை காலமும் எந்தவித புனரமைப்பு வேலைகளும் செய்யப்படவில்லை எனவும் இவ்வீதியால் போக்குவரத்தில் ஈடுபடும் மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாக்கப்படுவதாகவும் தெரிய வருகின்றது.

அதனால் வீதி அபிவிருத்தி அதிகாரிகள் உரிய நடவடிக்கையை மேற்கொண்டு இலகுவான போக்குவரத்தை மேற்கொள்வதற்காக அவ்வீதியை புனரமைத்துத் தருமாறு மக்கள் கேட்டுக்கொள்கிறார்கள். (எஸ்)

## பூச்சிநாசினி அருந்தியவர் அவசர சிகிச்சைப் பிரிவில்

(யாழ்ப்பாணம்)

பூச்சிநாசினி உட்கொண்டு தற்கொலை முயற்சியில் ஈடுபட்ட இளைஞர் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று மதியம் 1.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில சுழிபுரம கிழக்குப் பகுதியைச் சேர்ந்த மதியாபரணன் 'கோகுலதாஸ் (வயது 37) என்பவரே தற்கொலை முயற்சியில் ஈடுபட்டவர் ஆவார். (எஸ்)

சிறு விளம்பரம்

**Speed Mineral Water**

யாழ். மாவட்டத்தில் 'ஸ்பீட் மினரல் வோட்டர்' ஐ விசேட விலைக்கழிவுடன் பெற்றுக்கொள்ள உடன் தொடர்புகொள்ளவும்.

T.P 0774931034 (C/559)

சேவைசெய்யும் வாய்ப்பு எல்லோருக்கும் கிடைப்பதில்லை. தன் குழந்தைகளில் யாராவது ஒருவருக்கு உதவி செய்யும் வாய்ப்பை கடவுள் அளித்தால் அதன் மூலம் நீங்கள் பாக்கியம் பெற்றவராகிறீர்கள் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்

- விவேகானந்தர்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

# குடாநாட்டு ஊடக தர்மம்!

உதயன் பத்திரிகையின் செய்தியாசிரியர் ஞா.குகநாதனை மிலேச்சத்தனமாகத் தாக்கியோர் பிடிபட்டமை பற்றியும், பின்னணியில் இருந்தவர்கள் பற்றியும் செய்திகள் வந்தவண்ணமிருக்கின்றன. கொழும்பு ஊடகங்களில் மட்டுமல்லாமல் உலகெங்கிலும் ஊடகங்களிலும் இணையத்தளங்களிலும் இதுபற்றி விரிவாக எழுதப்படுகின்றன.

ஆனால், தினமுரசு தவிர்ந்த ஏனைய குடாநாட்டுப் பத்திரிகைகள் எதிலும், குகநாதனைத் தாக்கியோர் பற்றிய எந்தக் குறிப்பும் எழுதப்படவில்லை. ஏன்?... யாழ். பொலிசாரால் இரண்டு பேர கைதுசெய்யப்பட்ட மறுநாள் ஒரு பத்திரிகை மட்டும், “சந்தேக நபர் கைதாம்” என ஒரு சிறு குறிப்பைத் தெரிவித்திருந்தது.

தாக்குதல் நடத்தியோர் கைது செய்யப்பட்டிருப்பதுடன், மேலும் மூவரிடமிருந்து பொலிசார் வாக்குமூலங்களும் பெற்றுள்ளனர். சந்தேக நபர் கங்கொடவில நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டு 29 ஆம் திகதி வரை விளக்க மறியலிலும் வைக்குமாறு நீதவானால் உத்தரவிடப்பட்டுள்ளார். ஒரு சட்டத்தரணியுடன செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரமே குகநாதனைத் தாக்கியதாகவும் சந்தேகநபர் ஆரம்ப விசாரணைகளில் தெரிவித்துள்ளார்.

குகநாதன் தாக்கப்பட்ட மறுநாள் “இது தேர்தலில் தோற்றவர்களின் வேலை” என எவ்வித ஆதாரங்களையும் குறிப்பிடாமல் எழுதுவதற்கான ‘ஊடக தர்மத்’தைக் கொண்டிருக்கும் பத்திரிகைகள், ஆதாரபூர்வமாக உண்மைகள் வெளியாகும்போது ஏன் மௌனமாகி விடுகின்றன? இதன் பின்னாலுள்ள கள்ளத்தனத்தின் காரணங்கள் பற்றி நாம் சிந்திக்கவும், பேசவும் வேண்டியிருக்கிறது.

அவதூறுகளை மட்டும் எழுதி எதிராளிகளை வெற்றிகொள்ள எண்ணுவது ஊடக நெறியல்ல: அது ஈனத்தனமாகும். ஏனெனில், ஓர் அவதூறை உண்மையென நிரூபணம் செய்வது அவதூறாளனிற்கு எவ்வாறு சாத்தியமில்லையோ அவ்வாறே அவதூறால் பாதிக்கப்பட்டவர்க்கும் அவர்கள்மேல் ஏவிவிடப்பட்ட அவதூறைப் பொய்யென நிரூபணம் செய்யச் சாத்தியங்கள் குறைவே. ஒருவேளை மிகுந்த பிரயத்தனமெடுத்து அந்தப் பொய்யைப் பொய்யென்று நிரூபணம் செய்தாலும்கூட, அவதூறாளன் அதுபற்றியெல்லாம் அலட்டிக்கொள்ளாமல் அடுத்துச் சுமத்தக்கூடிய அவதூறு பற்றி யோசிக்கப் போய்விடுகிறார்.

தவிரவும், அவதூறால் பாதிக்கப்பட்டவர் தீக்குளித்து வந்தால்கூட, பழந்த கறை பழந்ததுதான். இதைத்தெரிந்து வைத்துக் கொண்டே ஊடகப் பலசாலிகள் எதிராளிகளை வெற்றிகொள்வதற்கான ஒரே ‘தர்மமாக’ அவதூறுகளைக் கையிலெடுத்துக் கொள்கிறார்கள்.

முந்திக்கொண்டு வேறு யார் மீதாவது அவதூறைப் போடுகிறவர்கள், ஏன் அவசரப்பட்டார்கள் என்பது குறித்தும் சந்தேகப்பட வேண்டியிருக்கிறது.

கூலிக்கு அமர்த்தப்பட்ட சமூக விரோதிகளே தாக்குதலை நடத்தியவர்கள். இவர்களது பழைய வழக்குகளுக்காக இலவசமாக வாதாடிய யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சட்டத்தரணி ஒருவர் கேட்டுக் கொண்டதன் பேரிலேயே தாக்குதலை நடத்தியதாக நீதிமன்றத்தில் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதைப் பற்றி எந்தக் குறிப்பும் எழுதாமல் குடாநாட்டுப் பத்திரிகைகள் மறைக்க வேண்டிய அவசியம் என்ன?

குகநாதனைத் தாக்கியவன் பின்னர் மற்றுமொரு தாக்குதலில் பலத்த காயப்பட்டு யாழ். மருத்துவமனை சென்றிருக்கிறான். அங்கிருந்து அந்த அடியாள் கொழும்பிற்கு அனுப்பப்பட்டிருக்கிறான். கல்வியங்காட்டில் தெருச் சண்டைகளில் ஈடுபடும் ஒருவன் கொழும்புவரை போனது எப்படி?

அவன் கைதான செய்தியைக் காதில் வாங்காமலே இந்தப் பத்திரிகைகளின் பின்னாலுள்ளவர்கள் ஊடக சுதந்திரத்திற்கான ஆர்ப்பாட்டத்தில் மட்டுமே குறியாக இருந்தது ஏன்? தாக்குதலாளிகள் கைதானது பொய் என்றோ, அவர்கள் பொய் சொல்கிறார்கள் என்றோ கூட எழுதாமல் பத்திரிகைகள் மௌனமாகி விட்டதன் பின்னால் உள்ள உண்மைகள் என்னவாக இருக்கும்?

பொதுமக்கள் முன்னால் அவதூறுகளை வெறுமனே எறிந்து விட்டு, பின்னால் என்னமோ நடந்து கொண்டிருப்பதாகத்தான் தோன்றுகிறது. என்ன, ஏது என்றறிய மேலும் காத்திருப்பதைத் தவிர வேறு வழியில்லை.

- ஆசிரியர் -

# சட்டவிரோதமாக ஆட்களை அனுப்பிய “உகண்டாபாலா” கட்டு நாயக்காவில் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமாக ஆட்களை வெளிநாட்டுக்கு அனுப்பி பண மோசடி நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த பாலா அல்லது ‘உகண்டாபாலா’ என்று அழைக்கப்படும் திருநாவுக்கரசு பாலச்சந்திரன் சி.ஐ.டி.யினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மலேசியாவிலிருந்து வருகைதந்த சந்தேக நபரை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து சி.ஐ.டி. யினர் கைதுசெய்துள்ளனர்.

முல்லைத்தீவின் தெற்குப் பிரதேசத்திலுள்ள மூளாய்ப் பிரதேசத்தைச் சேர்ந்த இவர் பயங்கரவாத செயற்பாடுகளுக்கு உதவியமை, வெளிநாடுகளுக்கு ஆட்களை கடத்தல், பண மோசடி போன்ற பல்வேறு குற்றச் சம்பவங்கள் தொடர்பில் தேடப்பட்டவர் என்று இரகசிய பொலிஸ் திணைக்களம் தெரிவிக்கின்றது.

இலங்கையிலிருந்து தப்பிச் சென்று மலேசியாவில் தலைமறைவாகியிருந்த இவரை மலேசிய அரசாங்கம் அங்கிருந்து இலங்கைக்கு நாடு கடத்தியுள்ளது. நாடுகடத்தப்பட்ட உகண்டாபாலா கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் ஊடாக மீண்டும் இலங்கைவர முற்பட்டபோதே சி.ஐ.டி.யினர் கைது செய்துள்ளனர்.

வெள்ளவத்தை, யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா ஆகிய பகுதிகளில் பல்வேறு செயற்பாடுகளில் இவர் ஈடுபட்டு வந்துள்ளார்.

ஆட்களை வெளிநாடுகளுக்கு அனுப்பும் விடயத்தில் முன்னணி விமான சேவை ஒன்றில் கடமைபுரியும் இரு ஊழியர்களுடன் இணைந்து இவர் செயற்பட்டுவந்துள்ளார். குறித்த சந்தேக நபர்கள் இருவரும் இரண்டு மாதங் களுக்கு முன்னர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

அதேசமயம் பயங்கரவாத இயக்கத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒரு வரை வெளிநாட்டுக்கு அனுப்புவதிலும் பாலா சம்பந்தப்பட்டுள்ளமை தொடர்பிலும் சி.ஐ.டி.யினருக்கு தகவல் கிடைத்துள்ளது. வெளிநாட்டுக்கு ஆட்களை அனுப்புவதாக கூறி பண மோசடியில் ஈடுபட்ட பாலாவிடம் பணத்தைக் கொடுத்து ஏமாந்தவர்கள் எவரும் இருப்பின் 011-2422176 அல்லது 011-2392917 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடனோ பணிப்பாளர், குற்றப் புலனாய்வுத் திணைக்களம், கொழும்பு-01 என்ற முகவருக்கோ தொடர்புகொண்டு அறியத் தருமாறு பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# கரும்பு உற்பத்திக்கு காணி இன்மையால் நாட்டில் சீனி உற்பத்தி கடுமையான வீழ்ச்சி

## கரும்பு ஆய்வு நிறுவனம் தகவல்

(கொழும்பு)

நாட்டின் சீனி உற்பத்தியில் துரித வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக கரும்பு ஆய்வு நிறுவனம் சுட்டிக் காட்டியுள்ளது. சீனி இறக்குமதிக்காக கடந்த வருடத்தில் மாத்திரம் 41 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்ததாக அந்த நிறுவனத்தின் தலைவர் சிரில் சுதுவெல்ல குறிப்பிட்டார்

தேசிய சீனிக்கான தேவையின் ஆறு வீதமான அளவே தற்போது உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது. தேவைக்கேற்ப உற்பத்திக்குரிய காணி வசதிகள் இன்மையே இந்தப் பிரச்சினைக்கு அடிப்படைக் காரணமாக அமைந்துள்ளது.

நாட்டில் நான்கு சீனி உற்பத்தித் தொழிற்சாலைகள் இருந்த போதிலும் அவற்றில் இரண்டு மாத்திரமே தற்போது இயங்கிவருகின்றது. இந்த தொழிற்சாலைகள் மூலம் உற்பத்திக்கான நூறு வீத பங்களிப்பினை வழங்க முடியாது

தேவைக்கேற்ப கரும்பு உற்பத்தி செய்யப்படாமையாலும் உற்பத்தியை மேற்கொள்வதற்கான காணி வசதிகள் இன்மையாலும் சீனி உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

# பொது நிர்வாக சேவையில் இணைந்த புதிய அதிகாரிகள் கொழும்பில் சந்திப்பு

(கொழும்பு)

பொது நிர்வாக சேவையில் புதிதாக இணைந்து கொண்ட அதிகாரிகளின் சந்திப்பொன்று கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

வடபகுதி மக்களின் பிரச்சினைகளை அடையாளம் காண்பதற்கான வழிவகைகளை ஏற்படுத்திக்கொடுக்கும் நோக்கில் பொது நிர்வாக சேவையில் இணைந்து கொண்ட அதிகாரிகள் முதற்கட்டமாக யாழ் மாவட்டத்தில் சேவையில் அமர்த்தப்பட்டிருந்தனர்.

இவர்கள் பெற்றுக்கொண்ட அனுபவங்கள் மற்றும் இனங்காணப்பட்ட பிரச்சினைகள் தொடர்பில் கருத்துக்களைப் பரிமாற்றிக் கொள்வதற்காக ஜனாதிபதி செயலணியின் தலைவர் காமினி செனரத் தலைமையில் இந்த சந்திப்பு இடம்பெற்றது.

# நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு நல்லை ஆதீனத்தில் நாட்டியாஞ்சலி

(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ். மாவட்ட அலுவலகத்தினால் நல்லூர் கந்தசுவாமி ஆலய மகோற்சவத்தை முன்னிட்டு நடத்தும் நாட்டியாஞ்சலி நிகழ்வு எதிர்வரும் 23அம் திகதி மாலை 6.30 மணிக்கு நல்லூர் திருஞான சம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மன்றத்தின் யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் த.ஈஸ்வரராஜா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் ஆசியுரையை நல்லை ஆதின முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் வழங்கவுள்ளார்.

இந்நிகழ்வில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பணிப்பாளர் நாயகம் சட்டத்தரணி லலித் பியூம் பெரேரா பிரதம விருந்தினராகவும் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகர் எம்.எஸ். சதீஸ்குமார் நல்லூர் பிரதேச செயலர் எஸ். செந்தில் நந்தனன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும், கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வடமாகாண பணிப்பாளர் திருமதி விமலேஸ்வரி ஸ்ரீகாந்தரூபன், பொறியியலாளர் த. தியாகராசா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (05)

# பொதுக்கூட்டம்

(நெல்லியடி)

வடமராட்சி சமூக பொருளாதார மேம்பாட்டு சபையின் வருடாந்தம் பொதுக்கூட்டம் இன்று மாலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

கொற்றாவத்தை செட்டிக்கரை சித்தி விநாயகர் திருமண மண்டபத்தில் தலைவர் வெ.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் அனைத்து ஆர்வலர்களையும் கலந்துகொள்ளுமாறு சபைச் செயலாளர் அறிவித்துள்ளார். (17)

# சகஸ்ர சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

அருள் ஸ்ரீ பத்தினாச்சி அம்பாள் ஆலய மணவாளக்கோல சகஸ்ர சங்காபிஷேகம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

20 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு முதல் விநாயகர் வழிபாடு, யாக பூஜை, தீபாராதனை என்பன நடைபெறும்.

21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு விஷேட திரஷ்ய ஹோமம் ஸ்ரீ சுத்தஹோமம் நடைபெற்று தொடர்ந்து 1008 சகஸ்ர சங்காபிஷேகம் நடைபெறும். (எஸ்.)

# யாழ். மாவட்டத்தில் முதியோர் சங்கங்கள் ஆரம்பம்

(யாழ்.நிருபர்)

யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பிரதேச செயலர் பிரிவுகளிலும், முதியோர் சங்கங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

பிரதேச செயலர்கள் சமூகசேவைஅதிகாரிகளின் மூலமாக கிராமசேவை உத்தியோகத்தாகளின் ஒத்துழைப்பினைப் பெற்று இச்சங்கங்களை அமைக்கும் பணியினை ஆரம்பித்துள்ளனர்.

முதியோர் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டபின் அவற்றிற்கு தன்னாலான உதவிகளை வழங்க முடியுமென முதியோர்களின் தேசிய செயலகப் பணிப்பாளர் திருமதி ஜே.கிருஷ்ணமூர்த்தி சமூக சேவை உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

எதிர்வரும் செப்டம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் யாழ்மாவட்ட பிரதேச செயலர் பிரிவுகள் தோறும் முதியோர் சங்கம் அமைக்கும் பணிகள் பூர்த்தியாகி விடுமெனத் தெரிவிக்கப்படுகிறது. (10)

# ஆளுமையுள்ள சமூகம் உருவாக முன்பள்ளியே அடித்தளமானது

**- துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம்**



(யாழ் நிருபர்)

ஆளுமையுள்ள சமூகம் ஒன்றை உருவாக்குவதற்கு முன்பள்ளிச் சிறுவர்களின் ஆற்றல்கள், திறன்கள் வளர்த்தெடுக்கப்படவேண்டும் இதற்கு முன் பள்ளி ஆசிரியர்களுடன் பெற்றோர்களும் இணைந்து செயற்படவேண்டும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் குறிப்பிட்டார்.

காரை கிட்ஸ்பாக் ஆங்கில மொழி மூலமான முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு நிகழ்விலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

காரை கிட்ஸ்பாக் தலைவர் கே. நேர்த்திரானந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து பேசுகையில், பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டிற்கு ஆரம்ப நிலையில் சிறந்த முறையில் அத்திபாரமிடப்பட வேண்டும் முன்பள்ளிச் சிறார்களைப் பயிற்றுவிக்கும் முன்பள்ளி ஆசிரியர்களின் பணி மிகவும் நெருக்கடியானது. இவர்களுக்கு வழங்கப்படும் ஊதியமோ மிகக்குறைவானது முன்பள்ளி ஆசிரியர்களின் பணிக்கு பெற்றோர் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

வளர்ச்சியடைந்துள்ள நாடுகளில் முள்பள்ளி ஆசிரியர்களுக்குப் பல்வேறு வசதிவாய்ப்புக்களும் ஏற்படுத்தப்பட் டுள்ளன இலங்கையிலும் முன்பள்ளி ஆசிரியர்களின் வளவாண்மையை விருத்தி செய்து அவர்களுக்குத் தேவையான வசதி வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

காரைநகரில் ஆங்கில மொழி மூலம் நடைபெறும் கிட்ஸ்பாக் சிறுவர் முன்பள்ளி சிறந்த முறையில் இயங்கிவருவதை அறிந்துள்ளேன். இங்கு வந்து பார்த்த பின் இந்தப் பிள்ளைகளின் திறமைகளையும் அவர்களை நெறிப்படுத்திய ஆசிரியர்களின் ஆற்றல்களையும் கண்டு மகிழ்கிறேன். இந்த முன்பள்ளி மேலும் வளர்ச்சியடைந்து ஏனைய முன்பள்ளிகளுக்கு உதாரணமாக விளக்க வாழ்த்துவதாகவும் குறிப்பிட்டார். (10)

## நல்லூர்க் கந்தனுக்கு இன்று 16ஆம் திருவிழா



விக்கிரகம் நல்லூரில் வீதி வலம் வரவே
அக்கிரமம் போகும் அமைதிவரும் பக்குவத்தை
ஆறுமுகன் வாயிலில் அமர்ந்து தியானிக்கத்
தேறுமே உள்ளந் தெளிந்து

- கந்தன் பாமாலை


நல்லை நகர் வீதி தன்னில் - திருக்
குமரன் உந்தன் புகழ் மணம்-
தொல்லை யில்லா வாழ்விங்கு - என்றும்
வந்தருள வரம் வேண்டும்.

- இ.சிவஉமாகரன், இணுவில்.

தொல்லை வினை தீர்க்கும் தூயவன் மாயவன் மருகன்
நல்லையிலே எழுந்தருளி நல்லருள் பொழியும் முருகன்
கல்லை நிகர்த்த மனமும் கசிந்துருகும் காட்சி தருவான்
இல்லையினித் துன்பம் இவன் இனிதாயிங்கிருக்கையிலே.

- இராசையா ஸ்ரீதரன்.

# மீளக்குடியேறிய மக்களுக்கு வாழ்வாதார உதவிகள்




தெல்லிப்பளை பிரதேச செயலர்பிரிவிலும் மீளக்குடியமர்ந்த மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு சுமார் ஆயிரம் ரூபா பெறுமதியான வாழ்வாதார உதவிகள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன. தெல்லிப்பளைப் பிரதேச செயலர் எஸ். முரளிதரன் தலைமையில் எவ்.ஏ.ஓ நிறுவனத்தால் வழங்கப்பட்ட தலா 10000 ரூபா பெறுமதியான கோழிக்குஞ்சுகள், தீவனங்கள் கோழிக் கூட்டிற்கான இரும்பு வலைகள் எனபனவற்றை நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) ஈ.பி.டி.பி.யின் வலிவடக்கு இணைப்பாளரும், வலிவடக்கு பிரதேச சபை உறுப்பினருமான அன்பு ஆகியோர் வழங்கி வைத்தனர்.

இந்நிகழ்வில். வடக்கின் துரித மீள் எழுச்சித் திட்டத்தின் பிரதித் திட்டப் பணிப்பாளர் குகநாதன் தெல்லிப்பளை உதவிப் பிரதேச செயலர் பிரபாகரமூர்த்தி மற்றும் கிராம அலுவலர்கள் உட்பட பயனாளிகள் பலரும் கலந்து கொண்டனர்.

# வன்னியில் இருந்து கொழும்புக்கு தினமும் பத்து லொறிகளில் பழைய இரும்புகள்

(வவுனியா)

யுத்த காலத்தில் சேதமடைந்த துருப்பிடித்த இரும்புகளுக்கு

தற்போது வர்த்தக சந்தையில் பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ள நிலையில் வ்ன்னியிலிருந்து தினமும் பெருமளவு பழைய இரும்புகளை ஏற்றிக்கொண்டு தலைநக்ர் கொழும்பிற்கு குறைந்தது பத்து லொறிகள் சென்ற வண்ணம் உள்ளது

வன்னியில் பழைய இரும்பு சேகரித்து விற்பனை செய்யும் நடவடிக்கையில் சிறு வர் கூட்டம் அதிகளவில் ஆர்வம் காட்டிவருகின்றது

வறுமையின் காரணமாகவே கல்வியை இடைநிறுத்திவிட்டு நாளாந்தம் வருமானம் பெறும் தொழிலில் சிறுவர்கள் ஈடுபட்டுவருகின்றனர் என நிவாரணப் பணியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

போர் நடைபெற்ற காலத்தில் காங்கேசன்துறைமுகத்தில் கடலில் மூழ்கிய கப்பல்கள் தற்போது இந்திய அரசின் உதவியுடன் வெளியே கொண்டுவரப்பட்டு கப்பலின் இரும்புகளும் வெட்டி கொழும்பிற்கு கொண்டு செல்லப்படுகின்றது. என அதிகாரிகள் தெரிவித்தனர். (39)

# புலமைப்பரிசில் பரீட்சையில் பாடசாலை மட்டத்தில் பரிசில்கள்

(யாழ். நிருபர்)

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி பாடசாலை மட்டத்தில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாக கொமர்ஷல் வங்கி முகாமையாளர் அறிவித்துள்ளார்.

கொமர்ஷல் வங்கியில் அருணலு சேமிப்புக் கணக்கொன்றை வைத்திருக்கும் மாணவர்கள் இப்பரிசில்களைப் பெறுவதற்குத் தகுதியுடையவர்கள் என்றும் முதலாம் பரிசாக பத்தாயிரம் ரூபாவும் இரண்டாம் பரிசாக ஏழாயிரத்து ஐநூறு ரூபாவும் மூன்றாம் பரிசாக ஐயாயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

மாவட்ட மட்டத்தில் முதலாமிடத்தைப் பெறும் மாணவர்களுக்கு அவர்களின் கணக்குத் தொகை இருமடங்காக அதிகரிக்க வாய்ப்புள்ளதென்றும் இது ஐம்பதாயிரம் ரூபாவாக மட்டுப்படுத்தப்பட்டிருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பரீட்சை நடைபெறும் தினத்துக்கு முன்னர் கணக்கு மீது ஐயாயிரம் ரூபாவாக இருக்கவேண்டுமெனவும் தெரிவித்தார். (10)

# இலவச முதலுதவிப் பயிற்சி

(கோப்பாய்)

யாழ்.போதனாவைத்தியசாலையில் கடமையாற்றும் தொண்டர்களுக்கான இவலச முதலுதவிப் பயிற்சி இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்ட கிளை மண்டபத்தில் நேற்று ஆரம்பமானது.

இதில் பங்கு பற்றும் தொண்டர்களுக்கு செய்முறை வழிகள் உடலுறுப்புக்கள் உடல் சுக செய்முறைகள் ஆகியன விளக்கப்படங்களுடனும் விரிவுரைகள் நிகழ்த்தப்படுகின்றன.

இதேபோன்று பல நிறுவனங்களிலும் பாடசாலைகளிலும் முதலுதவிப் பயிற்சி சிறிய நிதியுடன் நடத்தத்திட்டமிடப்பட்டுள்ளதாக இலங்கை செஞ்சிலுவைச்சங்க யாழ் மாவட்டக்கிளையின் தலைவர் பேராசிரியர் வீ.கே. கணேசலிங்கம் தெரிவித்துள்ளார்.

முதலுதவிப்பயிற்சி பெற விரும்புவோர் இலங்கைச் செஞ்சிலுவைச்சங்க யாழ். மாவட்ட கிளையுடனோ பிரிவுக்கிளையுடனோ தொடர்புகொண்டு சேவையைப் பெற்றுக் கொள்ளலாமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (08)





**யாழ். எய்ட் நிறுவனத்தினால் காரைநகர் ஊரி அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் அவுஸ்ரேலியாவில் இருந்து வருகைதந்த நித்திய ஒளி அமைப்பின் தலைவர் கலாநிதி அ. தர்மராஜா உரையாற்றுவதையும், சமூக சேவையாளர் ந. ஜெயராசா மாணவர்ஒருவருக்கு கற்றல் உபகரணங்கள் வழங்குதையும் காணலாம்.**

# சைவ நூல் பாராயணத்திலேயே சமயத்தின் பெருமை தங்கியுள்ளது

## பேராசிரியர் குமாரவடிவேல்

(யாழ்.நிருபர்)

சைவசமய நூல்களைப் பாராயணம் செய்வதிலேயே சைமயத்தின் பெருமை தங்கியுள்ளது. சைவமக்கள் ஒவ்வொரு வரும் தமது வீடுகளில் தேவாரம்,திருவாசகம் போன்ற திருமுறைகளையும் அபிராமி அந்தாதி போன்ற நூல்களையும் பாராயணம் செய்யவேண்டும் இவ்வாறு பாராயணம் செய்வதற்கு உகந்த நூல் திண்ணபுர அந்தாதி ஆகும் என்று யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் இ.குமாரவடிவேல் தெரிவித்தார்.

காரைநகர் கார்த்திகேயப் புலவரின் "திண்ணபுர அந்தாதி" நூல்வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வாழ்நாள் பேராசிரியர் கோபாலகிருஷ்ண ஐயர் தலைமையில் நல்லூர் சிவன் தேவஸ்தான மண்டபத்தில் நடைபெற்ற இந் நிகழ்வில் அவர் தொர்ந்து பேசுகையில்,

வேதங்கள்,திருமுறைகளைப் போன்று சைவமக்கள் போற்ற வேண்டிய பெருமைமிக்க நூல் திண்ணபுர அந்தாதி இந் நூலில் சுந்தரேஸ்வரம் பெருமானுடைய புகழ்,சிறப்புக்கள் அற்புதச் சிறப்புக்கள், திண்ணபுரத் திருத்தலத்தின் விழாச் சிறப்புக்கள் என்பன பற்றி கார்த்திகேயப் புலவர் அந்தாதியாகப் பாடியுள்ளார் என்றார்.

நூலினை பிரதம விருந்தினர் பேராசிரியர் இ.குமாரவடிவேல் வெளியிட்டு வைக்க கல்விக் காருண்யன் லயன் ஈ.எஸ்.பி.நாகரட்ணம் முதற் பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

கார்த்திகேயப்புலவரின் பூட்டனார். மற்றும் கலாநிதி பண்டிதர் க.வைத்தீசுவரக் குருக்கள் ஆகியோர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படடனர்.

அருள்மொழியரசி திருமதி வசந்தா வைத்தியநாதன், க.கு.க. சிவபா லன் கவிஞர் இராசையா குகதாசன் உட்பட்ட மற்றும் பலர் உரை நிகழ்த்தினர் (10)

# யாழ்.மாநகரப் பகுதியில் வழித்தடக் குறியீடுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரப் பகுதியில் காபற் வீதிகளாக மாற்றப்பட்ட வீதிகளுக்கான போக்குவரத்து வழித்தடக் குறியீடுகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் இடப்பட்டுவருகின்றது.

காபற் வீதியாக மாற்றப்பட்ட பழைய பூங்கா வீதி மற்றும் சென்ஜோன்ஸ் கல்லூரி முன்பாகவுள்ள வீதிகளுக்கு வழத்தடக் குறியீடுகள் இடப்பட்டுள்ளன தொடர்ந்தும் ஏனைய வீதிகளுக்கும் இவ் வழித்தடக் குறியீடுகள் இடும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றன.

வழித்தடக் குறியீடுகள் இல்லாமை காரணமாக அண்மைக் காலமாக பல வீதி விபத்துக்கள் யாழ்.மாநகர சபை எல்லைக் குட்பட்ட பகுதிகளில் நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.(பா)

# நவகலசாபிஷேகம்

(யாழ்நகர்)

நல்லூர் கந்தசுவாமி கோவிலில் பலகோடி ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள ஸ்ரீ சண்முக இராஜகோபுர நவகலசாபிஷேகம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

கார்த்திகை உற்சவத்தினமான அன்று காலையில் ஆதி கம்பீர ஸ்வர்ண கலாபவன நூதன நவதல ஸ்ரீ சண்முக இராஜகோபுரம் ஸ்ரீ சண்முகப்பெருமான் ஸ்வர்ணவாசல் தரிசனம் நவகலாபிஷேகம் நடைபெறவுள்ளது. (10)

# வீடமைத்துக் கொடுக்கும் பணியில் இராணுவத்தினர்

(பூநகரி)

பூநகரி 62ஆவது பிறிகேட் இராணுவ பிரிவுக் குட்பட்ட செட்டியகுறிச்சி கிராமசேவையாளர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட ...ற்பது குடும்பங்களுக்கு வீடமைத்துக் கொடுக்கும் வேலைதிட்டத்தினை இராணுவத்தினர் மேற்கொண்டுவருகின்றனர்.

இந்த வீடுகள் ஐந்தரை இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

சமயலறை,மலசலகூடம் ஆகியவற்றையும் உள்ளடக்கியதாக இவ் வீடுகளை நிர்மாணிக்கும் பணியில் இராணுவத்தினர் குழுக்களாக செயற்பட்டுவருகின்றனர். (07)

# நல்லூரில் காலணி பாதுகாப்பு நிலையம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோவில் திரு விழாவை முன்னிட்டு யாழ். மாநகரசபை யினர் ஆலயச்சூழலுக்கு அண்மையில் காலணி பாதுகாப்பு நிலையங்களை அமைத்துள்ளனர்.

நல்லூர் ஆலயத்திற்கு வருகைதரும் அடியார்களின் வசதி கருதி மிகக் குறைந்த கட்டணத்தில் இச்சேவை வழங்கப்பட்டு வருகிறது.

ஆலய சுற்றாடலுக்கு அண்மையில் பிரதான வீதிகளின் நுழைவாயிலில் ஆறு பாதணி பாதுகாப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

யாழ்.மாநகர சபையின் துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையங்களும் குறைந்த கட்டணத்துடன் பொது மக்களுக்கு சேவை வழங்கிவருவது குறிப்பிடத்தக்கதாகும். (10)

# உலக வங்கிப் பிரதிநிதிகளுடன் கல்வித்திட்ட கலந்துரையாடல்

(பருத்தித்துறை)


வடமாகாண கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் கல்வித்துறை அபிவிருத்திச் சட்டகம் மற்றும் வேலைத்திட்டம் இரண்டாம் இடைக்கால கல்வித் திட்டம் தொடர்பான உலக வங்கிப் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் எதிர்வரும் 25ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 11.00 மணி முதல் பி.பகல் 1.00 மணிவரை யாழ். பொது நூலகத்தில் உள்ள மாகாண கலந்துரையாடல் மண்டபத்தில் இந் நிகழ்வு நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களையும்,திட்டமிடல் பிரதிக் கல்விப் பபணிப்பாளர்களையும்,கல்வி அபிவிருத்திக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்களையும்,கோட்டக் கல்வி அதிகாரிகளையும் தவறாது கலந்துகொள்ளுமாறு வடமாகாணக் கல்விப் பூணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (109)

காலங்கள் எப்படி எப்படியெல்லாம் மாறிக்கொண்டு போகுது.

அது எங்களுக்கு ஆச்சரியமான ஒன்றாக இருந்தாலும் பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவில்லா காலநியதி என்பதைப் போல எல்லாம் மாறிக் கொண்டு தான் இருக்குது.




அந்த நாளேல மழை, மாரி காலங்களிலதான் நான ...றிய உந்த நுளம்புகள் இருந்தது.

மிஞ்சி மிஞ்சிப் போனாலும் பங்குனி மாசம் வரையுந்தான், அதுக்கங்கால நுளம்புகள் மருந்துக்கும் கிடையாது.

இப்ப வரியம் முன்னூற்றறுபத்தைந்து நாளிலேயும் நுளம்பு தைக்குது.

அதுக்கென்ன காரணம், அந்த நாளேல சனத்தொகை குறைவு, அதனால குப்பை கூளங்களும் குறைவாத்தான இருக்கும்.

இதுக்கிடேல்ல சொன்னாப்போல உந்த எங்கட பெரிய ஆசுப்பத்திரி இருக்கல்லே, அங்ககூ - நுளம்புதான்.

டெங்குக் காச்சல், மலேரியா, மூளைக் காச்சல், நிமோனியா, நெருப்புக்காச்சலெண்டு அதெல்லாம் உந்த நுளம்புகளாலதான் பரவுது எண்ணுகினம்.

அதோட அப்பிடி காச்சல்கள் வந்தால் நாங்களும் பெரிய ஆசுப்பத்திரியைத்தான் நாடவேணும், ஏலாமக் கிடந்தா அங்கான் கொண்டும் போகினம்.

அப்படி இருக்க அங்கையே எல்லா வாட்டிலேயும் நுளம்புகளால நோயாளிகள் கிடக்கேலாமக்கிடக்கு, சுகாதாரத்துக்கு கேந்திர இடமெண்டு சொல்லுற ஆசுப்பத்திரிகளிலேம் நுளம்புத் தொல்லையெண்டா நாங்க எங்கபோற!

இப்ப கொஞ்ச நாளைக்கு முன்னம் தான் உந்த டெங்குக் காச்சலொண்டால நூற்றுக்கணக்கான சனங்கள் செத்தேண்டு பேப்பர்களில போட்டவங்கள்.

பிறகு கொஞ்ச நாளா அந்தச் சிலமன் ஒண்டுமில்லாமக் கிடந்துது. பிறகு இப்பத்தான் திரும்பவும் உந்த டெங்குக் காச்சல் பரவி வருகுதெண்டு பேப்பர்களில போடுகினம்.

உலகம் பூராவும் ஏதாவதொண்டு நடந்து கொண்டு தான் இருக்கு. லண்டன்ல கலவரமாம். பெரிய பெரிய ஆலைகளையும் கொளுத்தி எரிக்கிறாங்கள். இதுக்கிடேல்ல 2012 ஆம் ஆண்டு உலக அழிவெண்டும் பயமுறுத்துதுகள். எந்த வெருட்டலுக்கும் பயப்பிடாத எனக்கு உந்த உலக அழிவெண்ட கதையைக் கேட்டதில இருந்து ஆமான நித்திரை இல்லைப் பாருங்கோ!

அதுக்கிடேல்ல இந்தச் சனியன் நுளம்பும் வந்து குத்திக் கொண்டிருக்கு. சாய்க்... "டக்"

# வெளியீட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

அருள்திரு ரூபன் மரியாம் பிள்ளையின் ஆசிரியத் தலையங்கம் ஓர் அறிமுகம்" நூல் வெளியீடு இன்று மாலை 3. மணியளவில் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள பிசப் சவுந்தரம் மீடியா சென்ரலில் கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர் பி.றெஜிஸ் நியூட்டன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் கி. விசாகரூபன் பிரதம விருந்தினராகவும், சிறப்பு விருந்தினராக அருள்திரு தமிழ்நேசன் அடிகளாரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நூலின் முதற்பிரதியை கனடா ஓய்வூதியர் திருமதி இமானுவேல் சவரியம்மாவும், சிறப்புப் பிரதியை கல்விக்காருண்யன் லயன் ஈ.எஸ். பி. நாகரத்தினமும் பெறவுள்ளனர். (எப்.எ்ஸ்)

# பூநகரிப் பகுதியில் 3 வீதிகள் துரித கதியில் புனரமைப்பு

(பூநகரி)

வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் கீழ் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வழிகாட்டலுக்கு அமைவாக அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவினால் பூநகரிப் பகுதியிலுள்ள வீதிகளில் புனரமைப்பு வேலைகள் கடந்த மாதம் ஆரம் பித்து வைக்கப்பட்டள்ளது.

2.5 கிலோமீற்றர் நீளமுடைய பூநகரி நாகதேவன் துறை வீதி பரமன் கிராய் சித்தன்குறிச்சி வீதி ஞானிமடம் செட்டிய குறிச்சி வீதி ஆகிய வீதிகளே இத்திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இவ் வீதிகளின் புனரமைப்புப் பணிகளை துறைமுக வீதி அபி விருத்தி அமைச்சு மேற்கொண்டு வருகிறது குறிப்பிடத்தக்கது. (07)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(19.08.2011 – வெள்ளிக்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

கர வருஷம்

ஆவணி 02 ஆம் நாள்.

இராகுகாலம் 10.35–12.05, சுபநேரம் 6.05–7.35,

நட்சத்திரம்: அச்சுவினி முழுவதும்

திதி: பஞ்சமி மு.ப 8.42 வரை

கரிநாள்

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

**மேடம்:–** பணவரவு,குடும்பத்தில் மகிழ்ச்சி,நண்பர் தெர்ல்லை,தேக ஆரோக்கியம்,தெரு விபத்து.

**ரிஷபம:–** வீண் அலைச்சல்,பணக் கஷ்டம்,உறவினர் தொல்லை,நண்பர் வருகை,குடும்பத்தில் சலனம்.

**மதுனம் :–** பணவரவு,குடும்பத்தில் மகிழ்ச்சி,உறவுகள் வருகை,தேக ஆரோக்கியம், விபத்துவரக்கூடும்.

**கடகம்:–** வீண்அலைச்சல்,பணக் கஷ்டம்,நண்பர் தொல்லை,குடும்பத்தில் கவலை,தேக சுகக்குறைவு.

**சிம்மம்:–** பணவரவு,அதிகாரப்போட்டி, குடும்பத்தில் குழப்பம்,தேக ஆரோக்கியம்,உறவினர் வருகை.

**கனனி :–** வீண் அலைச்சல்,பணக் கஷ்டம்,குடும்பத்தில் குழப்பம்,நண்பர் தொல்லை,மருத்துவச்செலவு.

**துலாம் :–**பணவரவு,அதிகாரப்போட்டி, வீண் வதந்தி,தொழில்நஷ்டம்,விபத்து வரக்கூடும்.

**விருச்சிகம்:–** வீண்அலைச்சல்,பணக் கஷ்டம்,குடும்பத்தில் சலனம்,அதகாரப் போட்டி,தொழில் நஷ்டம்.


**தனுசு:–** பணவரவு,குடும்பத்தில், மகிழ்ச்சி,நண்பர் தொல்லை,கடன் வசூல்,தேக ஆரோக்கியம்.


**மகரம:–** குடும்பத்தில் குழப்பம்,பணக் கஷ்டம்,வீண் அலைச்சல்,அதிகாரப் போட்டி,உடம்பு சுகக்குறைவு.

**கும்பம் :–** பணவரவு குடும்பத்தில் மகிழ்ச்சி,அதிகாரப் போட்டி,வீண் அலைச்சல்,உடல் நலக்குறைவு.

**மீனம்:–** குடும்பத்தில் கவலை,பணிக் கஷ்டம்,வீண் அலைச்சல் கடன் தொல்லை,தெருவிபத்து.

# முக்கோணத் தொடரின் 2 ஆவது போட்டியில் 3 விக்கெட்டுக்களால் வென்றது ஜொலிஸ்ரார்





கலிஸ்ரன் ரஜீவ்குமார்

(யாழ்ப்பாணம்)

முக்கோண வெற்றிக் கிண்ணத் தொடரின் இரண்டாவது ஒரு நாள் போட்டியில் ஜொலிஸ்ரார் அணி மூன்று விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் முதலாவது ஆண்டாக யாழ். நகரில் சிறந்த அணியைத் தெரிவு செய்யும் நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அணிகளுக்கிடையிலான முக்கோண ஒரு நாள் தொடரின் இரண்டாவது போட்டி கடந்த 14ஆம் திகதி சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் ஜொலிஸ்ரார் அணியும், சென்றல் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய சென்றல் அணி, 49.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 203 ஓட்டங்களைப் பெற்றது. இதில் நான்காவது விக்கெட்டுக்காக இணைந்த றஜீவ்குமார், கலிஸ்ரன் ஜோடி இணைப்பாட்டமாக 126 ஓட்டங்களைப் பெற்றதுடன் முக்கோணத் தொடரின் ஓர் சாதனையாகவும் பாதிவாகியுள்ளது. கலிஸ்ரன் 65 (தொடரின் இரண்டாவது அரைச்சதம்), றஜீவ்குமார் 56 (தொடரின் மூன்றாவது அரைச்சதம்) மற்றும் பாலேந்திரா 42 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சன்ஜித், ஜனார்த்தனன் தலா மூன்று, மணி இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு வெற்றியிலக்கு நோக்கி ஆடிய ஜொலிஸ்ரார் அணி 42. 5 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 206 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது. இதில் 28 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுக்களை இழந்து தடுமாறிய நிலையில் ஜோடி சேர்ந்த சகோதரர்களான கார்த்திக், லக்சுமிகாந் ஆகியோரின் இணைப்பாட்டத்தின் துணையுடன் ஜொலிஸ்ரார் வெற்றிபெற்றது குறிபபிடத்தக்கது. நான்காவது விக்கெட்டுக்காக இணைந்த இந்த ஜோடி 90 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றது. இதில் கார்த்திக் 66 (தொடரின் நான்காவது அரைச்சதம்), லக்சுமிகாந் 32, ஜனார்த்தனன் 22, நிரஞ்சன் ஆட்டமிழக்காது 24, பகீரதரன் 21 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சுபாதீஸ் நான்கு, றஜீவ்குமார் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். போட்டியின் ஆட்டநாயகனாக கார்த்திக் தெரிவானார்.



கார்த்திக்

இப்போட்டியில் ஜொலிஸ்ரார் அணி நான்கு புள்ளிகளையும், யாழ். சென்றல் அணி 1.7 புள்ளிகளையும் பெற்றுள்ளன. தொடரின் மூன்றாவது போட்டி நாளை மறுதினம் சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் யாழ். சென்றல் அணியை எதிர்த்து யாழ். பல்கலைக்கழக அணி மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## விளையாட்டுச் செய்திகள்

## அழைக்கப்பட்டன கிரிக்கெட் அணிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் விளையாட்டு அவையால் நடாத்தப்படவுள்ள 50 ஓவர்கள் கொண்ட ஒரு நாள் கிரிக்கெட் போட்டித் தொடருக்கு நான்கு அணிகள் அழைக்கப்பட்டுள்ளன.

யாழ். பல்கைலக்கழக அணி, K.C.C.C அணி, யாழ். சென்றல் அணி, வடமராட்சி ஈகிள்ஸ் அணி ஆகியவை பல்கலைக் கழகத்தினால் அழைக்கப்பட்டுள்ளன.

மேற்படி கிரிக்கெட் சுற்றுப் போட்டிக்கான திகதிகள் தீர்மானித்தல் தொடர்பான கலந்துரையால் எதிர்வரும் 22ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழகத்தின் உடற் கல்வி அலகு மண்டபத்தில் நடைபெறவுள்ளதெனவும் இதில், அழைக்கப்பட்ட அணிகளை குறித்த நேரத்திற்கு வருகை தந்து ஒத்துழைப்புத் தருமாறும் யாழ். பல்லைக்கழக விளையாட்டு அவை அலகு கேட்டுள்ளது.

# குமாரசுவாமி ருவென்ரி 20 தொடர் நியூஸ்ராரை வென்றது யூனியன்ஸ்

(யாழ்ப்பாணம்)

பி.எஸ். குமாரசுவாமி வெற்றிக் கிண்ண ருவென்ரி 20 தொடரின் மூன்றாவது போட்டியில் யூனியன்ஸ் அணி 33 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகத்தால் இரண்டாவது தடவையாக நடாத்தப்பட்டு வரும் பி.எஸ். குமாரசுவாமி வெற்றிக் கிண்ண ருவென்ரி 20 தொடரின் மூன்றாவது போட்டி கடந்த சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் யூனியன்ஸ் அணியும், நியூஸ்ரார் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய யூனியன்ஸ் அணி 15 ஓவர்களில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 152 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சதீஸ்கண்ணா 35, தயாளன் 36, வைகுந்தன் 23 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பகீரதன், விதுரன் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு ஆடிய நியூஸ்ரார் அணி 15 ஓவர்களில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 119 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது.

இதில் இளங்கோ 19, விதுரன் 57 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அருண் நான்கு, ஜான்சன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

# தேசிய கடற்கரை வலைப்பந்து தொடர் வடமாகாணம் சார்பாக யாழ். மாவட்டம்

(யாழ்ப்பாணம்)

தேசிய ரீதியில் முதல் முறையாக நடைபெறவுள்ள கடற்கரை வலைப்பந்தாட்டப் போட்டித் தொடரில் வட மாகாணம் சார்பாக யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட அணி பங்குபற்றவுள்ளது.

இலங்கை வலைப்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடாத்தப்படவுள்ள இப்போட்டித் தொடர் எதிர்வரும் 27,28ஆம் திகதிகளில் நீர்கொழும்பில் நடைபெறவுள்ளது.

இதில் வடமாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தி யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட அணி யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி ரூபசிங்கம் தலைமையில் செல்லவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மற்றும் வலைப்பந்தாட்ட பயிற்றுநர் எஸ். மனோன்மணி, வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் எஸ். சுரேந்தினி ஆகியோரும் இக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

எதிர்வரும் 26ஆம் திகதி மேற்படி குழு நீர்கொழும்பு பயணமாகவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

முதல் முறையாக இப்போட்டித் தொடர நடைபெறவுள்ளதால் ஏற்பாடுகள் யாவும் சிறப்பான முறையில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இலங்கை வலைப்பந்தாட்ட சம்மேளனத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.(எஸ்)

# பிரிவு மூன்றின் இரண்டாவது சுற்றுக்கு யாழ். முன்னணிப் பாடசாலைகள் தகுதி

(யாழ்ப்பாணம்)

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் இரண்டாவது சுற்றுப் போட்டிக்கு யாழ். மாவட்டத்திலுள்ள பல பாடசாலை அணிகள் தகுதிபெற்றுள்ளன.

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்த்தால் நடாத்தப்பட்ட பிரிவு மூன்றில் முதல் சுற்று ஆட்டங்கள் நிறைவடைந்த நிலையில் இரண்டாவது சுற்று ஆட்டங்கள் அடுத்த வாரம் நடைபெறவுள்ளது. 15, 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் நடை பெற்று வரும் இப்போட்டித் தொடரின் இரண்டாவது சுற்றுக்குத் தெரிவான யாழ். மாவட்ட பாடசாலை அணிகள் விபரம் வருமாறு:

15 வயதுப் பிரிவில்: சென் பற்றிக்ஸ், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, சென் ஜோன்ஸ, சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி, யாழ். இந்து, கொக்குவில் இந்து போன்ற பாடசாலைகளும்,

17 வயதுப் பிரிவில்: தெல்லிப்பளை யூனியன் கல்லூரி, மானிப்பாய் இந்து, சென் ஜோன்ஸ் 'ஏ', ஹாட்லி, ஸ்ரான்லி, யாழ். இந்து, தெல்லிப்பளை மகாஜனா, கொக்குவில் இந்து போன்ற பாடசாலை அணிகளும் தகுதி பெற்றுள்ளன.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தால் நடாத்தப்பட்ட பிரிவு மூன்றின் இரண்டாவது சுற்றுக்கு இம்முறையே யாழ். மாவட்டத்தில் அதிகமான பாடசாலை அணிகள் தகுதிபெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# மாவட்ட கிரிக்கெட் சங்கத்தில் வீரர்கள் பதிவு செய்யவேண்டும்

யாழ். மாவட்டத்திலுள்ள சகல விளையாட்டுக் கழகங்களின் வீரர்களும் யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தில் பதிவுகளைக் கொண்டிருக்க வேண்டும் என யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தினர் முடிவு செய்துள்ளனர். கடந்த 13ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்ற யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் செயற்குழுக் கூட்டத்திலேயே இம்முடிவு எடுக்கப்பட்டது. இது குறித்து மேலும் தெரிய வருவதாவது: யாழ். மாவட்டத்திலுள்ள சகல விளையாட்டுக்கழக வீரர்கள் அனைவரும் எமது சங்கத்தில் இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளைக் கொண்டிருக்க வேண்டும் என்றும் இது குறித்து சகல கழகங்களின் செயலாளர்களுக்கும் சுற்றுநிருபம் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும், இப்பதிவின் படியே, பிரிவு மூன்றுக்கான சுற்றுப் போட்டி நடைபெறவுள்ளதாகவும், இச் சுற்றுப் போட்டியில் அங்கத்துவம் பெற்ற அணிகள் மட்டுமே பங்குபற்ற முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சக்திவேல் விளையாட்டுக்கழகத்தின் கால்பந்து தொடர் நேற்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கொக்கிளாய் சக்திவேல் விளையாட்டுக்கழகத்தினால் வடமராட்சி கிழக்கில் பதிவு செய்யப்பட்ட அணிகளுக்கிடையிலான 11 பேர் கொண்ட கால்பந்தாட்டப் போட்டித் தொடர் நடத்தப்பட்டு வருகின்றது. இதில் நேற்றுக் காலை 9.00 மணிக்கு ஆரம்பமான இப்போட்டித் தொடரின் முதலாவது ஆட்டத்தில் உடுத்துறை செந்தமிழ் அணியை எதிர்த்து மணற்காடு சென் அன்ரனீஸ் அணி மோதியது. இதில் மணற்காடு 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

மற்றுமொரு போட்டியில் வத்திராயன் உதய சூரியன் அணி கட்டைக்காடு சென் மேரீஸ் 'பி' அணியை 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இதேவேளை, இன்று காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டிகளில் மணற்காடு சென் அன்ரனீஸ் அணியை எதிர்த்து மருதங்கேணி கணேசானந்த அணி மோதவுள்ளது. காலை 9.00 மணிக்கு உடுத்துறை பாரதி அணியை எதிர்த்து வேம்படி ஓடுமீன் அணி மோதவுள்ளது. பிற்பகல் 3.00 மணிக்கு எடுத்துறை செந்தமிழ் அணியை எதிர்த்து கட்டைக்காடு சென் மேரீஸ் 'ஏ' அணியும், பிற்பகல் 4.00 மணிக்கு வத்திராயன் உதயசூரியன் அணியை எதிர்த்து ஆழியவளை அருணோதயா 'பி' அணியும் மோதவுள்ளன. இறுதியாக பிற்பகல் 5.00 மணிக்கு நாகர்கோவில் நாகர் பதிணை எதிர்த்து நாகர்கோவில் தமிழ் ஒளி அணி மோதவுள்ளது. (38)

# பயிற்சிப் போட்டியில் சென்.ஜோன்ஸ் வெற்றி

(யாழ்ப்பாணம்)

ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணிக்கெதிரான 50 ஓவர்கள் கொண்ட ஒரு நாள் கிரிக்கெட் பயிற்சிப் போட்டியில் சென் ஜோன்ஸ் கல்லூரி அணி ஏழு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

கடந்த செவ்வாய்க்கிழமை சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இப்போட்டி நடைபெற்றது.

15 வயதுப் பிரிவின் சென் ஜோன்ஸ் கல்லூரியின் ஏ அணிக்கும், ஸ்கந்தவரோதய அணிக்குமிடையில் இடம்பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய ஸ்கந்தவரோயக் கல்லூரி அணி 38.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 98 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சுவீத்தன் 12 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் லோகதீஸ்வர் நான்கு, துவாரகசீலன் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு ஆடிய சென் ஜோன்ஸ் கல்லூரி அணி 22.5 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் அஜித் 19, கபில்ராஜ் 16, ஆட்டமிழக்காது பிரிசங்கர் 24, சிந்தியன் 20 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் கதியோன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

# தேசிய விளையாட்டுக்கு சர்வதேச அங்கீகாரம்; பெருமை மாற்றுவலுவுள்ளோரையே சாரும்

## மாற்றுவலுவுள்ளோர் கரப்பந்தாட்டச் சம்மேளனத் தலைவர் பாராட்டு



(கொழும்பு)

கரப்பந்தாட்டம் இலங்கையின் தேசிய விளையாட்டாய் இருப்பினும் இது வரையில் சர்வதேச மட்டத்தில் எந்தவொரு அங்கீகாரமும் பெற்றிருக்கவில்லை. அந்த வகையில் மாற்றுவலுவுள்ளோருக்கான உலகக் கிண்ண கரப்பந்தாட்டப் போட்டியில் இலங்கை அணி மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டதன் மூலம் அந்த அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது என இலங்கையின் அங்கவீனருக்கான தேசிய கரப்பந்தாட்ட சம்மேளனத்தின் தலைவரான, மேஜர் ஜெனரல் பியால் அபேசேகர தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டைப் பொறுத்தவரையில் இது மிகவும் முக்கியமானதொரு வெற்றியாய் கருதப்படுகின்றது. கரப்பந்தாட்டம் இலங்கையின் தேசிய விளையாட்டாக இருப்பினும் இது வரையில் சர்வதேச மட்டத்தில் எந்தவொரு அங்கீகாரமும் பெற்றிருக்கவில்லை. குறித்த இந்தத் தொடருக்கான ஆயத்தங்கள் மிக குறுகிய காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டது. உண்மையான ஆயத்தங்களானவை மார்ச் மாதமளவிலேயே ஆரம்பிக்கப்பட்டன.

இந்தத் தொடரின் உலகக்கோப்பையை வென்ற நாடான ஜேர்மனியை இந்த தொடரின்போது வென்ற ஒரே நாடாய் இலங்கை விளங்கியது. அத்துடன் தமது வெண்கலப் பதக்கத்திற்கான வழியில் ஸ்லோவாக்கியா மற்றும் கஸகஸ்தான் போன்ற பலம் பொருந்திய அணிகளையும் வென்றமை குறிப்பிடத்தக்கது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மாற்றுவலுவுள்ளோருக்கான உலகக் கிண்ண கரப்பந்தாட்டப் போட்டியில் இலங்கை மூன்றாம் இடத்தைப் பெற்றது.

அங்கவீனருக்கான உலக கரப்பந்தாட்ட சம்மேளனத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்ட இந்தப் போட்டித் தொடர் மூன்றாவது முறையாக இடம்பெற்றிருப்பினும் இலங்கை அணி பங்குபற்றிய முதல் சந்தர்ப்பம் இதுவாக அமைந்திருந்தது.

கம்போடியாவில் நிறைவடைந்த இப்போட்டியில் ஜேர்மனி, ஸ்லோவாக்கியா மற்றும் கஸகஸ்தான் போன்ற நாடுகளுக்கு எதிராக இலங்கை அணி விளையாடியது.

இத்தொடரில் சிறந்த அறிமுக அணியாக இலங்கை அணி தெரிவு செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

# சம்பியனானார்கள் ஸ்வியர்ஸ், டெய்சி





(சென்னை)

உலக இளம் வீரர்களுக்கான செஸ் சம்பியன் போட்டி ஆண்கள் பிரிவில் போலந்து கிராண்ட்மாஸ்டர் ஸ்வியர்ஸ் டோரியஸம், மகளிர் பிரிவில் பெரு நாட்டின் கோரி டி டெய்சியும் சம்பியன் பட்டம் வென்றனர்.

29ஆவது உலக இளம் வீரர்களுக்கான செஸ் சம்பியன்ஷிப் போட்டி சென்னையில் நிறைவடைந்தது. இறுதிச் சுற்றில் டாரியஸ் 92 நகர்த்தல்களில் பெலாரஸின் விலாடிஸ்லாவை வென்றார்.

இறுதிச் சுற்றில் ஆர்மெனியாவின் ரொபேர்ட் சமநிலை செய்தார். இதனால் டோரியஸ், ரொபேர்ட் இருவருமே தலா 10.5 புள்ளிகளுடன் சமநிலையில் இருந்தனர். எனினும் கடந்த போட்டிகளில் பெற்ற வெற்றிகளின் அடிப்படையில் டோரியஸ் சம்பியனாக அறிவிக்கப்பட்டார். ரொபேர்ட்டுக்கு 2ஆவது இடமே கிடைத்தது.

# தகுதிச் சுற்றில் சானியா தோல்வி முன்னணி வீரர்கள் 3ஆவது சுற்றில்




(சின்சினாட்டி)

சின்சினாட்டி ஓப்பன் ரென்னிஸ் தொடருக்கான தகுதிச் சுற்றின் இரண்டாவது போட்டியில், இந்தியாவின் சானியா மிர்சா தோல்வியடைந்தார். அத் துடன் முன்னணி வீரர்கள் மூன்றாவது சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

அமெரிக்காவில், சின்சினாட்டி ஓப்பன் ரென்னிஸ் தொடர் நடக்கிறது. இதன் பெண்கள் ஒற்றையர் தகுதிச் சுற்றின் இரண்டாவது போட்டியில், சானியா மிர்சா, அமெரிக்காவின் அலெக்சா கிளாட்சைச் சந்தித்தார். இதில் அலெக்சா 2-6, 4-6 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்றார்.

இதேவேளை, மகளிர் ஒற்றையர் பிரிவு 2ஆம் சுற்றுப் போட்டியில் சீனாவின் லி நா 6-3, 6-4 என்ற செட் கணக்கில் செக் குடியரசின் லுசி சபரரோவாவையும், ரஷ்யாவின் ஷரபோவா 6-1, 6-3 என்ற செட்கணக்கில் அவுஸ்ரேலியாவின் அனாஸ்டாசியா ரோடியோனோவாவையும், அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ் 6-3, 7-6 என்ற செட் கணக்கில் செக் குடியரசின் பெனிசோவாவை வென்று 3ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் 3ஆவது சுற்றுக்கு முன்னேறினார். 2ஆவது சுற்றில் இவர், அர்ஜென்டினாவின் மார்ட்டின் டெல் போட்ரோவை 6-3, 7-5 என்ற நேர் செட்கணக்கில் வென்றார்.

# ஐ.பி.எல்லிலிருந்து விலகினால் மட்டுமே டெண்டுல்கருக்கு பாரத ரத்னா விருது

## கூறுகிறார் மத்தியப் பிரதேச முதல்வர்



(புதுடில்லி)


நாட்டின் உயர்ந்த பாரத ரத்னா விருதுக்கு சச்சின் பெயர் பரிந்துரை செய்யப்பட்டால், அவர் ஐ.பி.எல். தொடரில் இருந்து விலக வேண்டும் என மத்திய பிரதேச முதல்வர் சிவராஜ் சிங் சவுகான் தெரிவித்துள்ளார்.

பாரத ரத்னா விருது பெறும் வீரர், இந்திய தேசத்துக்காகப் போட்டிகளில் பங்கேற்பவராக இருக்கவேண்டும். தனிப்பட்ட நிறுவனங்களுக்காக விளையாடக்கூடாது. இந்தியாவில் நடக்கும் ஐ.பி.எல். தொடரால், கிரிக்கெட் வீழ்ச்சியடைந்து விடும். இத்தொடருக்காக சச்சின் ஏலத்தில் விடப்பட்டு, அதிக விலைக்கு வாங்கப்படுகிறார்.

பாரத ரத்னா விருது பெற்றபின், அவரை இதுபோல ஏலம் விட்டால் மனதிற்கு மிகவும் வருத்தமாக இருக்கும். என்னைப் பொறுத்தவரை, சச்சின் முதலில் ஐ.பி.எல்., தொடரில் இருந்து விலக வேண்டும். அதன் பின் இவர் பெயரை, இந்த விருதுக்கு பரிந்துரை செய்யலாம்.

அதேநேரம் சச்சின் அதிக திறமையான வீரராக இருந்த போதிலும், பாரத ரத்னா விருது பெறும் முதல் விளையாட்டு வீரர் என்ற தகுதி, ஹொக்கியில் சிறந்து விளங்கிய தயான் சந்த்துக்கு தான் உள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# நாம் நினைத்தது நடக்கவில்லை நடக்கவேண்டியதைப் பார்ப்போம்



(புதுடில்லி)

இங்கிலாந்து டெஸ்ட் தொடரில் நாம் நினைத்தது நடக்கவில்லை. எனவே, நடக்கவேண்டியதைப் பார்ப்போம் என இந்திய அணியின் தெரிவுக் குழுத் தலைவர் ஸ்ரீகாந்த் தெரிவித்தார்.

இந்தியாவை விட இங்கிலாந்து அணி மிகச்சிறப்பாக விளையாடி வருகிறது என்பதை நிச்சயம் ஒப்புக் கொண்டே ஆக வேண்டும். கடந்த காலகட்டங்களை விட தற்போது அவர்களின் பந்துவீச்சு மிகப் பிரமாதமாக உள்ளது.


இந்திய அணியை பொறுத்தவரை இது கஷ்டகாலம் என்றுதான் சொல்ல வேண்டும். நாம் நினைத்தது எதுவும் சரியாக அமையவில்லை.

அடுத்தடுத்து வீரர்கள் காயமடைந்தது துரதிஷ்டவசமானது. இந்த ஒரு தோல்வியை மட்டுமே கருத்தில் கொண்டு, எந்த வீரரையும் உடனடியாக மாற்றிவிட முடியாது.

சேவக் போன்ற வீரர்களுக்கு மாற்றாக உடனடியாக வேறு ஒருவரை அணியில் கொண்டு வருவது முடியாத காரியம். வெற்றிகள் தொடர்ந்து வரும் போது பாராட்டுவார்கள். அதே தோல்வி வந்தால் விமர்சனங்களுக்கு ஆளாவது சகஜம்தான். அதை பெரிதுபடுத்தக்கூடாது. விமர்சனங்களை தூக்கிப் போட்டு, வெற்றிப்பாதைக்கு திரும்பும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இதனை அனைவரும் கருத்தில் கொண்டு நடந்து கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# ஒரு நாள் போட்டியில் முதல் நிலை அடுத்த இலக்காக இருக்கவேண்டும்

## ■இங்கிலாந்து அணிக்கு மைக்கல் வோகன் அறிவுரை■



(லண்டன்)

ஒருநாள் போட்டியில் முதல் நிலை இடத்தை அடைவது தான் இங்கிலாந்து அணியின் அடுத்த இலக்கு என, முன்னாள் தலைவர் மைக்கல் வோகன் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை கைப்பற்றிய இங்கிலாந்து அணி, முதல்நிலை இடத்தை அடைந்தது மகிழ்ச்சி அளிக்கிறது. இதேபோல ஒரு நாள் போட்டியிலும் தொடர்ந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி முதலிடத்தை அடைய வேண்டும். இதுவே இங்கிலாந்து அணியின் அடுத்த இலக்கு.

முதல்நிலை இடத்துக்கு முன்னேறிய இங்கிலாந்து அணிக்கு இனிமேல் தான் உண்மையான சவால் காத்திருக்கிறது. ஏனெனில் முதல்நிலை இடத்தை எளிதில் அடைந்துவிடலாம். ஆனால் அதனை தக்க வைத்துக் கொள்வது எளிதான காரியமல்ல. இதற்கு கடுமையாக போராட வேண்டும். ஒவ்வொரு போட்டியிலும் திட்டமிட்டு விளையாட வேண்டும்.

மூன்றாவது டெஸ்டில் இரட்டைச் சதம் அடித்து அசத்திய அலெஸ்டர் குக், விரைவில் டெஸ்ட் அரங்கில் பத்தாயிரம் ஓட்டங்களை எட்டுவார் என எதிர்பார்க்கிறேன். இதுகுறித்து அதிகம் பேச விரும்பவில்லை. ஏனெனில் இது அவருக்கு கூடுதல் நெருக்கடி ஏற்படுத்தலாம். ஸ்ரோஸின் ஓய்வுக்குப் பின், இங்கிலாந்து அணியின் தலைவராகச் செயற்படும் தகுதி இவரிடம் உள்ளது.

தற்போது அணிக்கு நல்ல பயிறுநர் கிடைத்துள்ளது. இவரின் பயிற்றுவிப்பின் மூலம் ஒரு நாள் போட்டியிலும் முதல் நிலை அணி என்ற தகுதியைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு இங்கிலாந்துக்கு உண்டு. அதனை அடைவதற்கான காலம் வெகு தூரத்தில் இல்லை என்றே நான் நினைக்கின்றேன். அதற்கு அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# ரோஸி சேனநாயக்காவுக்கு எதிராக ஐ.தே.க ஒழுக்காற்று நடவடிக்கை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரோஸி சேனநாயக்காவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ள அக்கட்சி தீர்மானித்துள்ளது. கட்சியை பகிரங்கமாக, கடுமையாக விமர்சித்தமையே இதற்கான காரணமாகும்.

ஐ.தே.க தலைமையகமான சிறிகொத்தவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் இத் தீர்மானம் மேற்கொள்ளப் பட்டது.

கட்சியின் பதில் பொருளாளர் சென ரத் கப்புகொட்டுவ இதற்கான பிரேரணையை முன்மொழிந்தார்.

எனினும் கட்சியில் சீர்திருத்தத்தை வலியுறுத்தும் ஐ.தே.கவின் வேறு பல அங்கத்தவர்களுக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்வதற்கான பிரேரணையை அக்கட்சியின் செயற்குழு நிராகரித்தது.

மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரண,கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க தென் மாகாண சபை உறுப்பினர் மைத்திரி குணரட்ன,மேல் மாகாண சபை உறுப்பினர் ஸ்ரீலால் லக்திலக்க ஆகியோருக்கு. எதிரான பிரேரணையை செயற்குழு நிராகரித்தது.



# 17 இராணுவ உலங்குவானூர்திகள் ரஷ்யாவிடம் இருந்து கொள்வனவு


(கொழும்பு)

ரஷ்யாவின் எம்.ஐ 171 ரக 17 இராணுவ உலங்குவானூர்திகளை இலங்கை கொள்வனவு செய்துள்ளதாக ரஷ்ய அரச ஆயுத ஏற்றுமதி நிறுவனம் தெரிவித்துள்ளது.

ரொசோபோன் எக்ஸ்போர்ட் எனும் ரஷ்ய ஆயுத ஏற்றுமதி நிறுவனத்தின் தலைவர் எனட்டோலி இஸேஸ்கிங் இந்த தகவலை உறுதிப்படுத்தியுள்ளார்.

ரஷ்யாவின் உலான் உதே விதான நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள இந்த உலங்குவானூர்திகள் இராணுவத் தேவைகள் மற்றும் பிரமுகர்களுக்கான பொருட்களை ஏற்றிச் செல்லல் என நான்கு ரகங்களைச் சேர்ந்தவை என ரஷ்ய அரச செய்திச் சேவையான இட்டடாஸ் குறிப்பிட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டில் ரஷ்ய அரசாங்கம் அந்த நாட்டிடம் இருந்து யுத்த உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக வழங்கிய கடன் சலுகையின் அடிப்படையில் இந்தக் கொடுக்கல் வாங்கள் இடம்பெற்றுள்ளதாக ரஷ்ய அரச செய்திச் சேவைமேற்கோள் காட்டி ரொய்டர் தகவல் வெளியிட்டுள்ளது. எனினும் இந்த உலங்குவானூர்தி கொடுக்கல் வாங்கல்களின் மொத்த பெறுமதி குறித்து ரஷ்ய அதிகாரிகள் தகவல் எதனையும் வெளியிடவில்லை.



# இலங்கையின் ஐ.நா பிரதிநிதியாக தமரா குகநாயகம் நியமனம்

(கொழும்பு)

சுவிஸர்லாந்தின் ஜெனீவாவிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான புதிய நிரந்தர வதிவிடப்பிரதிநிதியாக தமரா குகநாயகம் நியமிக்கப் பட்டுள்ளார். ஏற்கனவே இந்த பதவியை வகித்துவந்த ரேணுகா செனவிரத்ன வெளிவிவகார அமைச்சிற்கு அழைக் கப்பட்டுள்ளதாக அமைச்சின் பொதுசன தொடர்பாடல் பணிப்பாளர் நாயகம் சரத் திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

ரேணுகா சென்விரத்ன வெளிவிவகார அமைச்சின் மேலதிக செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் முன்னதாக கியூபாவுக்கான இலங்கைத் தூதுவராக சேவையாற்றியுள்ளார்.

# காலக்கெடு குறித்து ஊடகங்களில் அறிவிப்பதில் எவ்வித பயனும் இல்லை

## அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா

(கொழும்பு)


**கூட்டமைப்பினரின் காலக்கெடு குறித்து ஊடகங்களில் கூறினால் மட்டும் பயனில்லை அரசுடன் தொடர்பு கொள்ளவேண்டும் என நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவ அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.**

கடந்த 4ஆம் திகதி நடைபெற்ற 10ஆம் கட்டப் பேச்சின்போது இலங்கை அரசிடம் முன்வைக்கப்பட்ட மூன்று அம்சக் கோரிக்கைகளுக்கான பதிலை அரசு இரண்டு வாரங்களுக்குள் அறிவிக்க வேண்டும் என்றும், அவ்வாறு சாதகமான பதில் அறிவிக்கப்படாத பட்சத்தில் அரசுடனான் பேச்சுகள் முறிவடையலாம் எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்திருந்தது.

அரசுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வழங்கிய கால எல்லை நேற்றுடன் முடிவடைகின்றது.

இந்த நிலையில், அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா இது தொடர்பாகக் கூறுகையில்,

"இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுடன் முன்வைத்துள்ள மூன்று அம்சக் கோரிக்கைகள் அநீதியானவை. இருந்தும், அந்தக் கோரிக்கைகளை அரசு முற்றாக நிராகரிக்கவும் இல்லை.



அரசிடம் முன்வைக்கப்பட்டுள்ள மூன்று அம்சக் கோரிக்கைகளுக்குப் பதில் வழங்குவதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதுவித காலக்கெடுவும் அரசுக்கு விதிக்கவில்லை.

இது தொடர்பாக ஊடகங்களில் வெளியாகியுள்ள செய்திகளை அறிந்தேன் அவை குறித்து ஊடகங்களில் கூறினால் மட்டும் பயனில்லை. அரசுடன் தொடர்புகொள்ள வேண்டும் என்றார்.

# காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு 23 நிறுவனங்களிடம் விசாரணை

(கொழும்பு)

காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு சொந்தமான காணிகளை பயன்படுத்தும் 23 தனியார் நிறுவனங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிறுவனங்கள் ஆணைக்குழுவிற்கு சொந்தமான காணிகளில் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளாமையே இதற்கு காரணம் என ஆணைக்குழுவின் தலைவரும் சட்டத்தரணியுமான நிமல் புஞ்சிஹேவா குறிப்பிட்டுள்ளார்.

சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் சார்பான பிரதிநிதிகளை தனித்தனியாக அழைத்து இது தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்படும் என ஆணைக்குழுவின் தலைவர் கூறியுள்ளார். காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணிகளில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்காமை தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# எண்ணெய் அகழ்வாராய்ச்சிக்காக ரஷ்ய தூதுக்குழு வருகை



(கொழும்பு)

ரஷ்யாவின் எண்ணெய் மற்றும் இயற்கை வாயு விற்பனை செய்யும் தகேஸ்புரோம் என்ற பாரிய நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் குலேவ் வெலறி தலைமையிலான உயர் அதிகாரிகளின் தூதுக்குழுவொன்று நேற்று முன்தினம் பொருளாதார அபிவிருத்தித் துறை அமைச்சர் பசில் ராஜபக்'வை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கடந்த ஜூன்மாதம் ரஷ்யாவுக்கு மேற்கொண்ட விஜயத்தின் பலனாக அந்நாட்டு அகழ்வு ஆராய்ச்சி உத்தியோகத்தர்களை இலங்கைக்கு அனுப்பிவைக்க தீர்மானிக்கப்பட்டிருந்தது. இலங்கைக்கு வந்துள்ள ரஷ்ய தூதுக்குழுவினர் மன்னாரில் மேற்கொள்ளப்பட்டு வரும் எண்ணெய் அகழ்வு ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளுக்கு பயிற்சியளிக்கவுள்ளனர்.

அத்துடன் அகழ்வாராய்ச்சியில் ஈடுபடுபவர்களுக்கான அனைத்து பயிற்சிச் செலவீனங்களையும் ரஷ்யாவே பொறுப்பேற்கவுள்ளது. மன்னாரில் மேற்கொள்ளப்பட்டுவரும் அகழ்வாராய்ச்சி நடவடிக்கைகளில் இந்திய மற்றும் சீன அதிகாரிகள் தற்போது பணிபுரிகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வெளிநாட்டில் வேலை தேடிச்செல்லும் ஆண்கள் தொகை அதிகரிப்பு

(கொழும்பு)

வெளிநாட்டு வேலைவாய்ப்பில் நீண்ட கால நடைமுறையில் மாற்றம் ஏற்பட்டதையடுத்து இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் பெண்கள் வெளிநாடு செல்லும் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது இதற்கு அமைவாக ஆண்கள் வெளிநாடு செல்லும் எண்ணிக்கையில் உயர்வு ஏற்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க தெரிவித்துள்ளார்.

இந்த நிலைமையானது சிறந்ததொரு முன்னேற்றமாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டுகின்றார். ஆண்களுக்கான பல்வேறு தொழிற்பயிற்சி ஊக்குவிப்பு நடவடிக்கைகளை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் மேற்கொண்டுவருவதே இதற்கு காரணமாக அமைந்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் பெண்கள் வீட்டுப் பணிப் பெண்களாக செல்வதைக் குறைத்து அதற்குப் பதிலாக ஆண்களை கூடுதலாக வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் மேலும் கூறினார்.

# விசாரணைகள்

(கொழும்பு)

உரிய தரத்தினை கொண்டிராத காரணத்தினால் சீல் வைக்கப்பட்டிருந்த ஒரு தொகை சிமெந்தின் சீல் அகற்றப்பட்டமை தொடர்பில் சுங்கத்திணைக்களத்தால் விஷேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சுங்கத்திணைக்கள அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட திடீர்ப் பரிசோதனையின் போதே இந்த சிமெந்து சீல் அகற்றப்பட்டமை கண்டறியப்பட்டுள்ளதாக மேலதிக சுங்கப்பணிப்பாளர் அஜந்த டயஸ் குறிப்பிட்டார்.

இதனை அடிப்படையாகக் கொண்டு விசேட உள்ளக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் சுட்டிக் காட்டினார்.

உரிய தரத்தினை கொண்டிராத காரணத்தால் ஒரு தொகை சிமெந்து இலங்கை சுங்கத் திணைக்களத்தினரால் அண்மையில் சீல் வைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# பொதுவாக அறிந்திருக்க வேண்டிய சில விடயங்கள்

01. இலங்கையின் தேசிய மிருகம் எது? - மர அணில்
02. இலங்கையின் தேசிய பறவை எது? - காட்டுக்கோழி
03. இலங்கையின் தேசிய மலர் எது? - நீலோற்பலம்
04. இலங்கையின் தேசிய மரம் எது? - நாகமரம்
05. இலங்கையின் தேசிய விளையாட்டு எது? - கரப்பந்தாட்டம்
06. இலங்கையின் நீளமான நதி எது? - மகாவலி கங்கை
07. இலங்கையின் மிக உயரமான மலை எது? - பீதுறுதாலகால மலை
08. இலங்கையின் மிகப்பெரிய தாவரவியற் பூங்கா எது? - பேராதனைப் பூங்கா
09. இலங்கையின் இயற்கைத் துறைமுகம் அமைந்துள்ள இடம் - திருகோணமலை
10. இலங்கையையும், இந்தியாவையும் பிரிக்கும் நீரிணை எது? - பாக்குநீரிணை
11. இலங்கையில் அமைந்துள்ள செயற்கைத் துறைமுகம் எது? - கொழும்பு
12. இலங்கையில் விலங்குகள் சரணாலயம் அமைந்துள்ள இடம் எது? - வில்பத்து
13. இரத்தினக் கல் அதிகளவு கிடைக்கும் இடம் எது? - இரத்தினபுரி
14. இலங்கையின் அதியுயர்ந்த நீர்வீழ்ச்சி எது? - பம்பரகந்த
15. கறையானால் அரிக்கப்படாத தாவரம் எது? - தேக்கு, வேம்பு
16. அழகிய கூடு கட்டும் பிராணி எது? - தூக்கணாங் குருவி
17. பறக்க முடியாத பறவை எது? - தீக்கோழி
18. மிகப்பெரிய முட்டையிடும் பறவை எது? - தீக்கோழி
19. மிகச்சிறிய முட்டையிடும் பறவை எது? - தேன்சிட்டு
20. பாலைவனக் கப்பல் எனப்படும் மிருகம் எது? - ஒட்டகம்
21. மிகச் சிறிய இலையுடைய தாவரம் எது? - நெப்பந்திசு
22. உயரமான விலங்கு எது? - ஒட்டகச் சிவிங்கி
23. வேகமாகப் பறக்கும் பறவை எது? - பாடும் பறவை
24. மிக வேகமாகத் தரையில் ஓடும் விலங்கு எது? - சிறுத்தைப் புலி
25. உலகின் மிகப் பெரிய கண்டம் எது? - ஆசியாக் கண்டம்
26. உலகின் நீளமான நதி எது? - நைல் நதி
27. உலகின் மிகப்பெரிய பாலைவனம் எது? - சகாராப் பாலைவனம்
28. உலகின் மிக உயர்ந்த மலைச் சிகரம்? - எவரெஸ்ட்
29. உலகின் அதிகளவு மக்கள் தொகை கொண்ட நாடு? - சீனா
30. உலகிலேயே குறைந்த மக்கள் தொகையைக் கொண்ட நாடு - வத்திக்கான் நகரம்
31. உலகிலேயே மிகச் சிறிய கண்டம்? - அவுஸ்ரேலியா
32. பூமிக்கு மிக அருகில் உள்ள கோள் எது? - வெள்ளி
33. பூமிக்கு மிகத் தொலைவில் உள்ள கோள் எது? - புளூட்டோ
34. மிகப்பெரிய கோள் எது? - வியாழன்
35. ஒளி மிகுந்த கோள் எது? - வெள்ளி
36. மிகச் சிறிய கோள் எது? - புதன்
37. சமுத்திரங்களில் மிக ஆழமானது எது? - மரியானா ஆழி
38. மின்சாரத்தைக் கண்டுபிடித்தவர் யார்? - மைக்கல்பரடே
39. வானொலியைக் கண்டுபிடித்தவர் யார்? - மார்க்கோனி
40. தொலைபேசியைக் கண்டு பிடித்தவர்? - அலெக்சாண்டர் கிரகாம் பெல்
41. மோட்டார் காரைக் கண்டுபிடித்தவர் யார்? - புல்மன்
42. மின்குமிழைக் கண்டுபிடித்தவர் யார்? - தோமஸ் அல்வா எடிசன்



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2011

பகுதி - I, II விடைகள்

# கல்வி முரசு

வெளியீடு 27



இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்களின் விடைகள்

## பகுதி - I

| | | | |
|---|---|---|---|
| 1. | 1 | 19. | கிலி |
| 2. | 2 | 20. | பழகு |
| 3. | 17 | 21. | 525/- |
| 4. | 20 | 22. | 254/- |
| 5. | 1 | 23. | 14 |
| 6. | 1 | 24. | ஞாயிறு |
| 7. | x | 25. | திங்கள், செவ்வாய், வியாழன் |
| 8. | √ | | |
| 9. | √ | 26. | 144/- |
| 10. | √ | 27. | 92/- |
| 11. | 1) 30 cm<br>2) 54 cm | 28. | 8 |
| | | 29. | 3 |
| 12. | 16 km 100 m | 30. | 2 |
| 13. | 200 m | 31. | 4 |
| 14. | 1) cm<br>2) L<br>3) ml<br>4) mm<br>5) g | 32. | 1 |
| | | 33. | 3 |
| | | 34. | 4 |
| | | 35. | 3 |
| 15. | 60 | 36. | 2 |
| 16. | கடிகாரத்தில் குறித்துக் காட்டுக. | 37. | 4 |
| | | 38. | 1 |
| 17. | 400803, 400805 | 39. | 4 |
| 18. | அழகு | 10. | 4 |

## பகுதி - II

01. 03
02. இடது பக்கம்
03. செஞ்சிலுவைச் சங்கம்
04. பஸ் நிறுத்துமிடம்
05. Bus stop
06. சாரதி அனுமதிப்பத்திரம்
07. பாதசாரிகள் கடவை
08. நாகொடை இந்துக் கல்லூரி பிரதான மண்டபத்தில்
09. 1) ஸ்ரார் புத்தகசாலை 2) மண்டப வாயில்
10. 2008 ஆனி 24 ஆம் திகதி
11. 230/-
12. மேல்மாகாணம்
13. பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
14. 1500/-
15. College
16. இந்து மதம்
17. வாயில்களிலும்
18. பொருத்தமான விடைக்குப் புள்ளியிடுக
19. பொருத்தமான விடைக்குப் புள்ளியிடுக
20. 2
21. திடமும், சுகமும் உள்ளவர்
22. நித்தமும் / ஒவ்வொரு நாளும்
23. சுத்தம்
24. கொண்டார்
25. பொருத்தமான விடைக்குப் புள்ளியிடுக
26. 1) மாணவர்கள் 2) இரண்டாம்
3) வரவேற்கப்பட்ட 3) நடைபெற்றது
27. ஆணிவேர்: வேம்பு, பலா, இலுப்பை, அரசு
நாருடுவேர் : வாழை, பப்பாசி, கமுகு, தென்னை, நெல், பனை
28. அரியம் 29. 09
30. 06 31. உருவில் குறித்துக் காட்டுக
32. 240 g
33. 1) Red 2) Green
3) Blue 4) Yellow
34. 1) அடையாள அட்டையைப் பெற்றுக் கொடுத்தல்
2) உணவுப் பங்கீட்டு அட்டை வழங்குதல்
35. வெண்புறா 36. இந்தியா
37. மகாவலி கங்கை 38. வைரவிழா / மணிவிழா
39. மகா இலுப்பலம
40, 41. கருத்துள்ள வாக்கியத்திற்கு புள்ளி வழங்குக.
42. பிழை
43. சரி
44. சரி
45. பிழை
46. செடி
47. மரம்
48. புல்
49. பூண்டு
50. மரம்
51. கொடி
52. புல்
53. செடி
54. கொடி

55 - 60 கருத்தமைந்த தெளிவான வாக்கியங்களுக்குப் புள்ளி வழங்குக.

## இலங்கையின் பிரதான ஆறுகள். (முக்கியமான ஆறுகளில் சில இங்கு தரப்பட்டுள்ளன)

| | | | |
|---|---|---|---|
| 01. மகாவலி கங்கை | 02. ஜின் கங்கை | 03. கிரிந்தி ஓயா | 04. மாணிக்க கங்கை |
| 05. களனி கங்கை | 06. நில்வள கங்கை | 07. மீ ஓயா | 08. கும்புகன் ஓயா |
| 09. களு கங்கை | 10. தெதுறு ஓயா | 11. மாதுறு ஓயா | 12. பறங்கி ஆறு |
| 13. வளவ கங்கை | 14. கலா ஓயா | 15. கல்லோயா | 16. மல்வத்து ஓயா |

## இலங்கையிலுள்ள நதிகள், நீர்வீழ்ச்சிகள் பற்றிய தகவல்கள்

01. இலங்கையில் மிக நீளமான நதி - மகாவலி கங்கை
02. மகாவலி கங்கை எந்த மலையிலிருந்து ஊற்றெடுக்கின்றது?
    சிவனொளிபாத மலையை அண்டியுள்ள கற்றன் மேட்டுநிலத்தில்
03. நதிகள் கடலுடன் கலக்குமிடம் - கழிமுகம்
04. மகாவலி கங்கையின் நீளம் - 338 Km. இது முக்கோண வடிவில் அல்லது விசிறி வடிவில் காணப்படும்.
05. மகாவலி கங்கை கடலுடன் கலக்கும் இடங்கள் - திருகோணமலை, கொட்டியாரக் குடா
06. நீரை வெவ்வேறு இடங்களுக்குக் கொண்டு செல்ல மனிதனால் வெட்டப்படுவது - வாய்க்கால்
07. மலைப்பகுதியில் இயற்கையாகத் தோன்றும் ஊற்று நீரை ஒன்றாகச் சேர்த்து பள்ளத்தாக்கு ஊடாகப் பாய்ந்து செல்வது - நதி, கங்கை, ஆறு
08. இலங்கையில் மிகப் பெரிய நீர்த்தேக்கம் - விக்டோரியா
09. ஆறுகள் ஆழமான பள்ளத்தாக்கில் செங்குத்தாகப் பாயும்போது தோன்றுவது - நீர்வீழ்ச்சி
10. இலங்கையில் மிகப்பெரிய நீர்வீழ்ச்சியான பம்பரகந்த அமைந்துள்ள மாவட்டம் - பதுளை
11. இலங்கையின் உள்ள அழகிய நீர்வீழ்ச்சி - துன்கிந்த, தியலும
12. நீர்மின்சாரம் உற்பத்தியாக்கத்திற்குப் பயன்படும் நீர்வீழ்ச்சிக்கள் - அபர்டின், லக்ஸபானா, விக்டோரியா
13. சிவனொளிபாத மலைப் பகுதியால் ஹற்றன் மேட்டுநிலத்தில் உற்பத்தியாகும் ஆறுகள் - மகாவலிகங்கை, களனி கங்கை, வளவ கங்கை.
14. இலங்கையில் உள்ள நீர்த் தேக்கங்கள் - விக்டோரியா, கொத்மலை, உடவளவை, போர்வர்த்தன

## பிரதான ஆறுகளும் அவை கடலுடன் கலக்கும் இடங்களும்

| | | |
|---|---|---|
| 01 மகாவலி கங்கை | - | திருகோணமலை |
| 02. களு கங்கை | - | களுத்துறை |
| 03. களனி கங்கை | - | கொழும்பு |
| 04. வளவ கங்கை | - | அம்பாந்தோட்டை |
| 05. நில்வள கங்கை | - | மாத்தறை |

## இலங்கையிலுள்ள நீர்வீழ்ச்சிகள்

| நீர்வீழ்ச்சி | உயரம் (மீற்றரில்) | அமைந்துள்ள ஆறு |
|---|---|---|
| துன்கிந்த | 55.6 மீ | மகாவலி கங்கை |
| தியலும | 171 மீ | மகாவலி கங்கை |
| பம்பரகந்த | 241 மீ | வளவ கங்கை |
| கிரிந்தி | 165 மீ | களு கங்கை |
| இராவணா | 49 மீ | கிரிந்தி ஓயா |
| ரம்பொட | 119 மீ | மகாவலி கங்கை |
| அபர்டின் | 90 மீ | களனி கங்கை |





# தொடர் மொழிக்கு ஒரு மொழி

| | |
|---|---|
| 01. சுயசரிதை | :- ஒருவர் தானே தன்னைப் பற்றி எழுதும் வரலாறு |
| 02. சுயநலவாதி | :- தனது நலனை மட்டும் கருதி வாழ்பவன் |
| 03. ஒத்திகை | :- கலை நிகழ்ச்சிகளை மேடையேற்றும் முன்பு பார்த்துத் திருத்தும் நிகழ்ச்சி |
| 04. ஊதாரி | :- கண் மூடித்தனமாகப் பணத்தை வீணே செலவு செய்பவன் |
| 05. ஆத்திகன் | :- கடவுள் இருக்கின்றார் என நம்புகிறவன் |
| 06. நாத்திகன் | :- கடவுள் இல்லை என நம்புகிறவன் |
| 07. நூன்முகம், முன்னுரை | :- நூலாசிரியர் தனது நூலைப்பற்றி நூல் முகத்தில் எழுதும் உரை |
| 08. அணிந்துரை | :- ஒரு நூலுக்கு நூலாசிரியர் தவிர்ந்த பிறர் வழங்கும் புகழ் உரை |
| 09. அலி, பேடி | :- ஆணும், பெண்ணும் அல்லாதது |
| 10. களஞ்சியம் | :- பொருள், பண்டங்களைச் சேர்த்து வைக்கும் இடம் |
| 11. கால்கோள் விழா | :- யாதாயினும் ஒன்றைத் தொடங்குவதற்கு முன்பு எடுக்கப்படும் விழா |
| 12. குருகுலவாசம் | :- மாணவர்கள் குருவுடன் தங்கியிருந்து கல்வி பயிலுதல் |
| 13. கைமருந்து | :- ஒருவர் வைத்தியர் இன்றி தாமே தனது நோய்க்குச் செய்யும் மருந்து |
| 14. சரணாகதி | :- வேறு துணையில்லாதபோது ஒருவரிடம் தன்னை ஒப்படைத்தல் |
| 15. செவிலி | :- வளர்ப்புத் தாய் |
| 16. தலைமுறை | :- ஒருவர் பிறக்கும் வரையிலிருந்து இறக்கும் வரையிலான காலப்பகுதி |
| 17. திறைசேரி | :- அரசின் நிதி சம்பந்தமான விடயங்கள் கையாளப்படும் இடம் |
| 18. தீர்க்கதரிசி | :- எதிர்கால நிகழ்வுகளை அறியும் ஆற்றல் படைத்தவன் |
| 19. சஞ்சீவி | :- உயிர்தரும் கிடைத்தற்கரிய மருந்து |
| 20. அசகாய சூரன் | :- யாருடைய துணையுமின்றி தனித்துக் காரியத்தை முடிக்கும் திறனுடையவன் |
| 21. விகடகவி | :- நகையும் பரிகாசமும் சேர்ந்துவர கவி புனையும் ஆற்றலுடைவயவன் |
| 22. அட்டாவதானி | :- ஒரேநேரத்தில் எட்டு விடயங்களை அவதானிக்கும் திறனுடையவன் |
| 23. தசாவதானி | :- ஒரே நேரத்தில் 10 விடயங்களை அவதானிக்கும் திறனுடையவன் |
| 24. சதாவதானி | :- ஒரே நேரத்தில் 100 விடயங்களை அவதானிக்கும் திறனுடையவன் |
| 25. வெள்ளோட்டம் | :- புதிதாகச் செய்யப்பட்ட கப்பல், தேர் போன்றவற்றை முதன் முதலில் செலுத்திப் பார்த்தல் |
| 26. நூலகம் | :- வாசிப்பதற்காக நூல்களைத் தொகுத்து வைத்திருக்கும் இடம் |
| 27. சுயம்பு | :- ஒருவராலும் படைக்கப்படாது தானே தோன்றியது |
| 28. உலோபி | :- தானும் உண்ணாது பிறருக்கும் கொடுக்காது சேர்த்து வைப்பவன் |
| 29. வேட்பாளர் | :- தேர்தலில் போட்டியிடுபவர் |
| 30. அநாதை | :- தாய், தந்தையரை இழந்தவர் |
| 31. சிரஞ்சீவி | :- நெடுங்காலம் உயிர்வாழ்பவர் |
| 32. அகதி, ஏதிலி | :- பொருள், பண்டம் எல்லாவற்றையும் இழந்து வேறு இடத்தில் வாழ்பவன் |
| 33. வெள்ளி விழா | :- 25 ஆவது ஆண்டு நிறைவு விழா |
| 34. பொன் விழா | :- 50 ஆவது ஆண்டு நிறைவு விழா |
| 35. வைரவிழா, மணிவிழா | :- 60 ஆவது ஆண்டு நிறைவு விழா |
| 36. பவள விழா | :- 75 ஆவது ஆண்டு நிறைவு விழா |
| 37. நூற்றாண்டு விழா | :- 100 ஆவது ஆண்டு நிறைவு விழா |
| 38. மஞ்சரி | :- ஒரு தண்டிலே பல மலர்கள் சேர்ந்துள்ள பூங்கொத்து |
| 39. போலி நகல் | :- ஒன்றைப்போல இருக்கும் வேறு ஒன்று |
| 40. தீவு | :- நான்கு பக்கமும் நீரால் சூழப்பட்ட தனிப் பிரதேசம் |

# குண்டோ குண்டு...



உலகிலேயே உள்ள அம்மாக்களில் குண்டான அம்மா இவர் தான். ஒருமுறை சுப்பர் மாக் கெட்டுக்கு ஷொப்பிங் செய்யச்சென்றால் ஆறு ட்ரோலிகளைப் பயன்படுத்திப் பிள்ளைகளு டன் உணவுப்பொருட்களைக் கொள்வனவு செய்கின்றார். எட்டு மணிநேரம் செல வழித்து உணவுப்பொருட்களை கொள் வனவு செய்கின்றார்.

ஒரு நாளைக்கு அவருக்கு 21000 கலோரிகள் தேவைப்படுகின்றது. 32 வயதான இவர் அமெரிக்காவின் அரி சோனா மாநிலத்தைச் சேர்ந்தவர். தான் எடை கூடுவதை விரும்புவதாக தெரிவித்துள்ளார்.



# தீப்பற்றாத ஆடை

உடல்முழு வதையும் நுரை போலப் போர்த் திக்கொள்ளக்கூடிய இரசாயன நுரை ஆடையை அமெரிக்காவில் கண்டுபிடித்திருக்கின்றனர். அந்த நுரை ஆடை சுமார் இரண்டாயிரம் டிகிரி சென்டி கிரேட் வெப்பநிலையையும் சுபலமாகத் தாங்கக் கூடியது. இந்த உடையை அணிந்துகொள்பவர், தீ நடுவே புகுந்து செல்லும்போது கொஞ்சம் கூட வெப்பநிலையை உணர மாட்டார். இதை அணிந்து கொண்டு சுமார் இருபது நிமிடங்கள் வரை நெருப் பில வேலை செய்யலாம். வீடுகளோ, விமானங்களோ, கப்பல்களோ தீப்பற்றி எரியும்போது தீயில் புகுந்து உயிர்களையும், பொருட்களையும் மீட்கலாம்.



# 5 மணி நேர ஊர்வம்பு



மற்றவர்கள் குறித்து ஊர் வம்பு பேசுவது சில ரது பிறவிக்குணம். அது எந்தக் காலத்திலும் மாறாது. சமீபத்தில் இது குறித்த ஆய்வு இங்கிலாந் தில் மேற்கொள்ளப்பட் டது. அதில், நாள் ஒன் றுக்கு 298 நிமிடங்கள் அதாவது 5 மணி நேரம் பறரைக் குறித்து பெணகள் சிலர் ஊர்வம்பு பேசுவது தெரியவந்தது. குழந்தைகள் பற்றியும், கடைகள், உபயோகிக்கும் சோப்புகள், மற்றும் "செக்ஸ்" பிரச்சினைகள் குறித்தும் பெண்கள் பேசுகின்றனர். அதேநேரத்தில் தங்களின் உடல் எடை, உணவுப் பழக்க வழக்கங்கள் மற்றும் உடை விவகாரங்கள் குறித்து மட் டும் 24 நிமிடங்கள் விவாதிக்கின்றனராம்.

ஆய்வு மேற்கொண்டவர்களில் மூன்றில் ஒரு பங்கு பெண்கள் தங்களின் சாப்பாட்டு விஷயம் குறித்தே முக்கியமாக பேசுவதாகத் தெரிவித்துள்ளனர். மேலும் சிலரோ, தங்களின் உடல் அழகை அறுவைச் சிகிச்சை மூலம் சீரமைப்பது எப்படி என்பது குறித்து விவாதிக்கின்றனர். பொதுவாக தங்களின் தோழிகள், கணவன்மார்கள் மற்றும் தாயாருடன் பேசி வம்பு அளக்கின்றனர். இவர்களில் தோழிகளுடன் தான் அதிக ஊர்வம்பு பேசுவதாக ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

# தனிமைப்படுத்தப்படும் சிறுமிகள்



நேபாள நாட்டில் நடமாடும் கடவுள்களாக சிறுமிகள் கும்பிடப்படுகின்றனர். இச்சிறு மிகளை குமாரி அல்லது குமாரி தேவி என்று அழைப்பார்கள். குமாரி என்கிற சொல்லுக்கு புனிதமானவள் என்று அர்த்தம். அத் துடன் துர்க்கை யின் குழந்தைப் பருவப் பெய ரையும் குறிக்கும். ஆதிவாசிப் பெண்களில் ஒரு குறிப்பிட்ட சாதியினரில் இருந்து குமாரிகள் தேர்ந்தெடுக்கப்படு கின்றனர்.

இவர்கள் நான்கு அல்லது ஐந்து வயதாக இருக்கின்றபோது தேர்ந்தெடுக்கப்படுவார்கள். அன்று முதல் ஆலயத்தில் சுமார் 10 வருடங்கள் வரை தனிமையில் அடைத்து வைக்கப்படுவார்கள். நண்பர்கள், குடும்பம் என்று யாரும் இவர்களுக்கு இருக்க முடியாது. பொதுமக்களுடன் உரையாட முடியாது. நிலத்தை தொட முடியாது. ஏனெனில் புனிதம் கெட்டுப் போய் விடும் என்று நம்பப்படுகின்றது. வருடாவருடம் இடம்பெறுகின்ற விழாவில் இவர்கள் பொதுமக்களால் வழிபடப்படுகின்றார்கள்.



## முழுநீளத் திரைப்படங்களை பார்வையிடுவதற்கு

இரண்டு மாதங்களுக்கு முன்னர் கூகுள் தனது ஒன்லைன் வீடியோ தளமான யூடியுபில்(Youtube) புதிய இந்தித் திரைப்படங்களை முழுதும் பார்த்து ரசிக்கும்படி Box Office என்ற புதிய சேனலை அறி முகப்படுத்தியது. யூடியுபில் பலரால் ஏற்றப்பட்ட முழுநீளப் படங்கள் இருந்தாலும் புதிய ஹிட் படங்களை மாதமொரு முறை ஒவ்வொன்றாகப் பார்க்கும்படி கொண்டு வந்தது. மற்றொரு பிரபல தளமான யாகூவும் (Yahoo) தன் பங்குக்கு என்ன செய் வது என்று கூகுளின் சேவையைப் பின்பற்றி ஒன்றைக் கொண்டு வந்துள்ளது. யாகூவின் இந்த புதிய சேவை MoviePlex என்று அழைக்கப்படு கிறது. இந்த இணையதளத்தில் முழு நீள பாலிவுட் இந்தித் திரைப்படங் களை உங்கள் கணணியில் எப்போதும் எங்கேயும் பார்த்துக் கொள்ள முடியும். கூகுளின் BoxOffice இல் மாதத் திற்கு ஒரு புதிய படத்தை மட்டுமே வெளியிடுவார்கள். ஆனால் இதில் தரவேற்றப்பட்ட எல்லாப் படங்களை யும் எப்போது வேண்டுமானாலும் பார்க்க முடியும். தற்போது 8 திரைப் படங்களைத் தரவேற்றியிருக்கிறார் கள். மேலும் பல படங்கள் விரை வில் இணைக்கப்படவுள்ளன. ஆனால் இதில் உள்ள குறை என்னவென்றால் இதில் இணைக்கப்படும் திரைப்படங் கள் Standard Version இல் இருப்ப தால் பிளாஷ் வசதி இல்லாத கருவி களில் பார்க்க இயலாது என்பதே. ஐபேட் மற்றும் சில மொபைல்களில் பிளாஷ் வசதி இருப்பதில்லை. கணனியில் பார்ப்பதற்கு சிக்கல் ஏதும் இல்லை.

இணையதள முகவரி:- http://in.movies.yahoo.com/movieplex/


## போலியான மின்னஞ்சல் முகவரிகளை கண்டறிவதற்கு

நண்பர்களோ அல்லது மற்ற நபர்களோ அவர்க்ளை தொடர்பு கொள்ள நம்முடன் மின்னஞ்சல் முகவரியை பகிர்ந்து கொள்கின்றனர். ஆனால் மற்றவர்கள் பகிர்ந்து கொள்ளும் மின்னஞ்சல் முகவரிகள் சரியானதா இல்லை போலியானதா என பார்த்தவுடன் நம்மால் கண்டறிய முடியாது. அவர்கள் கொடுக்கும் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பினாலும் சென்று சேராது. இதற்குக் காரணம் ஒருவேளை அவர்கள் தவறாக மின்னஞ்சல் முகவரியை கொடுத்திருக்கலாம் அல்லது அதிக நாட்கள் உபயோகிக்காமல் விட்டதால் செயலிழந்து இருக்கலாம் அல்லது வேண்டுமென்றே நம்மிடம் போலியான மின்னஞ்சல் முகவரியை கொடுத்திருக்கலாம். இது போன்ற நேரத்தில் அந்த மின்னஞ்சல் முகவரி சரியானதா இல்லை வேலை செய்கிறதா, செயல் இழந்து விட்டதா என சுலபமாகக் கண்டறிய நமக்கு ஒரு தளம் உதவி புரிகிறது. இதனை அறிந்து கொள்ள நீங்கள் அதிக தொழில்நுட்ப அறிவு எதுவும் பெற்றிருக்க வேண்டிய அவசியமில்லை. கீழே உள்ள லிங்கில் கிளிக் செய்து இந்த தளத்திற்கு செல்லுங்கள். உங்களுக்கு ஒரு விண்டோ வரும். அதில் உள்ள காலி கட்டத்தில் நீங்கள் உங்கள் பரிசோதிக்க வேண்டிய மின்னஞ்சல் முகவரியை கொடுத்து அருகில் உள்ள Verify Email என்ற பட்டனை அழுத்தவும். நீங்கள் Verify Email பட்டனை அழுத்தியவுடன் கீழே நீங்கள் கொடுத்த மின்னஞ்சல் முகவரி சரியானதா இல்லை போலியானதா என்ற முடிவு வரும். இவற்றை வைத்து மின்னஞ்சல் முகவரியை நாம் சரிபார்த்துக் கொள்ளலாம்.

இணையதள முகவரி:-
http://www.verifyemailaddress.org/

கணினி முலை

# பாடல்பாடும் ரோபோ



தாய்வான் தலைநகர் தைபேயில் உள்ளது தேசிய தாய்வான் அறிவியல் தொழில்நுட்ப பல்கலைக் கழகம். இங்குள்ள எலக்ட்ரோனிக் மற்றும் கணினி பிரிவு பேராசிரியர் சியூலின் மற்றும் சக ஆசிரி யர்கள், மாணவர்கள் சேர்ந்து பாடும் ரோபோ அழகியை உருவாக்கி உள்ளனர். பாட்டு ஸ்வரங் கள் (நோட்ஸ்) எழுதிய பேப்பரை இதன் முன்பு காட்டினால் போதும். பாடகி போல அருமையாகப் பாட ஆரம்பிக்கிறது. பேப்பரில் எழுதியிருக்கும் நோட்ஸ்களை படிப்பதற்காக இதன் கண்ணில் பிரத்தியேக கமெரா பொருத்தப்பட்டுள்ளது. அதன் உதவியுடன் வரிகளை முதலில் கவனமாக படிக் கிறது. பின்னர் ஒலிக்கான நோட்ஸ்களைத் தனியாக சினதசைசர் கருவிக்கு மாற்றுகிறது. பாடல் வரிகளை சரியாக உச்சரித்து ராகம் போட்டுப பாடுகிறது. சீனாவின் மேண்டரின் மொழியில் எழுதப்பட்ட எந்தப் பாடலையும் 40 வினாடியில் படித்து விட்டு இந்த அற்புத ரோபோ பாடி விடுமாம்.

இந்தியச் செய்திகள்

# புலிகள் தான் எதிரானவர்கள் தமிழ் மக்களுக்கு ஆதரவே!

## தமிழக இளைஞர் காங்கிரஸ் தலைவர் யுவராஜ்

(சென்னை)

தமிழக இளைஞர் காங்கிரஸ் தலைவர் யுவராஜ் சென்னை பொலிஸ் டி.ஜி.பி. யிடம், நாம் தமிழர் கட்சித் தலைவர் சீமான் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மனு கொடுத்துள்ளார்.

மனுவைக் கையளித்த பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

தடைசெய்யப்பட்ட புலிகள் இயக்கத்தை ஆதரித்தும், அகில இந்திய காங்கிரஸ் தலைவர்களையும், தொண்டர்களை இழிவுபடுத்தியும் சீமான் பிரசாரம் மேற்கொண்டு வருகிறார்.

இது குறித்து 15 நாட்களுக்கு முன்பு சென்னை பொலிஸ் கமிஷனரிடம் புகார் மனு கொடுத்தோம். சீமான் மீது எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை. ராஜீவ்காந்தி கொலைவழக்கில் நீதிமன்றத்தால் தூக்குதண்டனை விதிக்கப்பட்டவர்களை நிரபராதிகள் என்று கூறிவருகிறார்கள்.

இதை நாங்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமாட்டோம். உடனடியாக அவர்களை தூக்கிலிடவேண்டும். நீதிமன்றத்தில் விதிக்கப்பட்ட தீர்ப்பை பொதுக் கூட்டத்தில் விவாதிக்கக்கூடாது என்று மனு கொடுத்துள்ளோம்.

சீமான் வன்முறையை தூண்டும் வகையில் பேசுகிறார். இதே போக்கு நீடித்தால் தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு கெடுவதற்கு வாய்ப்புள்ளது. இலங்கைத் தமிழர்களுக்கு என்றும் ஆதரவாக இருபபோம். அதேநேரத்தில் எங்களுக்கு புலிகள் தான் எதிரானவர்கள். ராஜீவ் காந்தியை கொலை செய்தவர்களை குற்றவாளியாகப் பார்க்கவேண்டும்.

தமிழர்களின் உணர்வுகளை இதில் சேர்க்க வேண்டாம். சீமான் மீது பொலிஸார் நடவடிக்கை எடுக்காவிட்டால் நிச்சயமாக அடுத்தகட்டமாக தகுந்த பதில் அடி கொடுப்போம். இளைஞர் காங்கிரசைப் பொறுத்தவரை அமைதியாக இருக்க மாட்டோம்" என்று யுவராஜ் தெரிவித்தார்.

# ரஜினியின் ராணா மீண்டும் ஆரம்பம்

(சென்னை)




ரஜினி ரசிகர்களால் மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கப்படும் ராணா படப்பிடிப்பு மீண்டும் ஆரம்பமாகவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. நான்கு மாதங்களுக்கு முன் தொடங்கப்பட்ட படப்பிடிப்பு வேலைகள் ரஜினிகாந்தின் உடல்நலக்குறைவினால் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன.

இலட்சக்கணக்கான ரஜினி ரசிகர்கள் ரஜினிகாந்த்தின் உடல்நிலை குறித்து கவலை கொண்டு, அவர் சிங்கப்பூரில் இருந்து உடல்நலத்துடன் திரும்பி வருவதை எதிர்பார்த்திருந்தனர். வந்த பின்னர் ராணா படம் குறித்து கேள்வி எழுப்பி வந்தனர். அவர்களுக்கு பதில் அளிப்பது போல், தற்போது ராணா குறித்த செய்தி இயக்குனர் கே.எஸ்.ரவிக்குமாரினால் வெளியிடப்பட்டுள்ளது.

இது ஒரு சரித்திர காலப்படம் என்று முடிவாகியுள்ளதால், அதற்கான படப் பிடிப்புககாக, ஹைதரபாத் ராமோஜி பிலிம் சிட்டியில் உள்ள முழுத் தளத்தையும் எடுத்துக்கொள்ள முடிவாகியுள்ளது. ஒக்டோபர் 6 ஆம் திகதி முதல் படப் பிடிப்புப் பணிகள் முழுவீச்சில் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. ராணா படத்தில் ரஜினி மூன்று வேடங்கள் ஏற்று நடிக்கவிருக்கிறார். கதாநாயகிகளில் தீபிகா படுகோன் மட்டுமே இதுவரையில் உறுதியாகியுள்ளது.

# நான்கு நாட்களில் 25 கோடி ரூபா "ஆரக்ஷன்" படம் வசூல் சாதனை




(புதுடில்லி)


தடைகள், போராட்டங்களுக்கிடையே வெளியான பிரகாஷ் ஜாவின் ஆரக்ஷன் திரைப்படம் 4 நாட்களில் 25 கோடி ரூபா வசூலை சம்பாதித்துள்ளது. இரண்டாவது வாரத்தில் இது மேலும் அதிகரிக்கும் என திரையுலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அமிதாப் பச்சன், சயீப் அலிகான், மனோஜ் பாஜ்பாய், தீபிகா படுகோன் உள்ளிட்டோர் இந்தப் படத்தில் நடித்துள்ளனர். வெள்ளிக்கிழமை படம் திரையிடப்பட்டது. ரூபா 42 கோடி ரூபா செலவில் இந்தப் படம் தயாரிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

உத்தரப்பிரதேசத்தில் இந்தப்படம் இன்னும் திரையிடப்படவில்லை. டெல்லியில் பெரியளவில் வரவேற்பு இல்லாவிட்டாலும் அரங்கங்கள் ஓரளவு நிறைந்து காணபபடுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# துரோகம் தொடர்ந்தால் வரைபடம் மாறும்

## மத்திய அரசுக்கு வைகோ எச்சரிக்கை!



(மதுரை)

மத்திய அரசின் துரோகம் தொடர்ந்தால், இந்தியாவின் வரைபடத்தில் சில பகுதிகள் மறைய வாய்ப்புள்ளது என மதுரையில் ம.தி.மு.க., பொதுச் செயலாளர் வைகோ பேசினார். பெரியாறு அணைப் பகுதியில் புதிய அணை கட்டும கேரளாவின் முயற்சியைக் கண்டித்தும், துணை போகும் மத்திய அரசை கண்டித்தும் மதுரையில் நேற்றுமுன்தினம் உண்ணாவிரதம் நடந்தது.

உண்ணாவிரதத்தில் வைகோ பேசியதாவது,

ஊழலை எதிர்த்த அன்னா ஹசாரேவை, ஊழல்வாதிகள் நிறைந்த திகார் சிறையில் அடைத்துள்ளனர். ராஜிவ் கொலையில் கைதானவர்களுக்கு தூக்குத் தண்டனை விதித்துள்ளனர்.

தமிழர்களை வஞ்சிக்க, காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சிகள் இணைகின்றன. நாமும் அதுபோல் இணைய வேண்டும். தமிழகத்திற்கு மத்தியஅரசின் துரோகம் தொடர்ந்தால், நூற்றாண்டு சுதந்திரம் காணும் போது, இந்தியாவின் வரைபடத்தில் சில பகுதிகள் விடுபட நேரிடும், என்றார்.

பெரியார் திராவிடக்கழக தலைவர் களத்தூர் மணி, ம.தி.மு.க. தலைவர்கள் உட்பட பலர் பங்கேற்றனர். உலக தமிழர் பேரமைப்பு தலைவர் நெடுமாறன் பழச்சாறு கொடுத்து உண்ணாவிரதத்தை நிறைவு செய்தார்.

# ஜெயலலிதாவின் ஆட்சி பற்றி 6 மாதத்தின் பின்பே கூறமுடியும் - ராமதாஸ்

(சென்னை)

தமிழகத்தில் ஜெயலலிதாவின் ஆட்சி பற்றி ஆறுமாதங்களின் பின்பே கூறமுடியும் என பா.ம.க நிறுவுனர் ராமதாஸ் தெரிவித்துள்ளார். சென்னையில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

தி.மு.க. அரசுக்கு போட்டியாக அ.தி.மு.க. அரசும் இலவசங்களை கொடுத்து வறுமையை ஒழிக்கப்போகிறோம் என்று கூறுகிறார்கள். தமிழ்நாட்டில் 27 சதவீதம் பேர் வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ளனர். இது குறையவே இல்லை. ஆனால் மது வருமானம் ஆண்டுக்கு ஆண்டு உயர்ந்து கொண்டே வருகிறது. அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்து 100 நாட்கள் முடிந்து விட்டது. சட்டம் ஒழுங்கில் எந்த மாற்றமுமில்லை.

தமிழக சட்டசபையில் அ.தி.மு.க.வினர் அப்போது செய்ததை இப்போது தி.மு.க.வினர் ஏட்டிக்குப் போட்டியாக செய்கிறார்கள். இந்த கூட்டத்தொடர் முழுவதும் சட்ட சபையை புறக்கணிப்போம் என்று தி.மு. க.வினர் கூறியுள்ளனர். அ.தி.மு.க.வினர் செய்ததைத்தான் இவர்கள் செய்கிறார்கள். எனவே இதற்கு முக்கியத்துவம் கொடுக்கத் தேவையில்லை. என்றார்.

# இந்தியாவை சீர்குலைக்க முயற்சியா? காங். குற்றச்சாட்டுக்கு அமெரிக்கா மறுப்பு

(வொஷிங்டன்)

ஊழலுக்கு எதிராக அன்னா ஹசாரே நடத்தும் போராட்டத்தின் மூலம் இந்தியாவை சீர்குலைக்கச் செய்ய அமெரிக்க முயற்சிப்பதாக கூறப்படும் செய்திகளை அமெரிக்கா மறுத்துள்ளது.

இதுகுறித்து ஊடகங்களிடம் பேசிய அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் விக்டோரியா நூலண்ட் இந்தியாவில் வெளியாகும் செய்திகள் முற்றிலும் தவறானவை எனக் குறிப்பிட்டார்.

இதற்குமுன்னர் இந்திய காங்கிரஸ் கட்சியின் செய்தித்தொடர்பாளர், சுதந்திரத்துக்குப் பிறகு இந்தியாவில் நடக்கும் ஒரு போராட்டத்துக்கு ஆதரவாக அமெரிக்கா ஏன் பேசவேண்டும் எனக் கேட்டிருந்தார். இந்த போராட்டங்களின் பின்னணியில் அமெரிக்கா இருக்கலாம் என்று காங்கிரஸ் கட்சி சூசகமாகத் தெரிவித்திருந்தது.

அன்னா ஹசாரே தனி ஆள். அவருக்கு எந்த அமைப்பும் கிடையாது. பிறகு எப்படி இந்த இயக்கம் தோன்றி வளர்ந்தது. கைது செய்யப்படுவதற்கு முன்பு வீடியோவில் பதிவுசெய்யப்பட்ட செய்தியை உலகம் முழுவதும் இணையத் தளம் மற்றும் தொலைபேசி மூலமாக பரப்பியது யார்? என காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் கேள்வி எழுப்பினார். இந்தியாவில் உள்ள எந்த இயக்கத்தைப் பற்றியும் அமெரிக்கா ஒருபோதும் பேசியதில்லை. இப்போதுதான் முதன்முறையாகப் பேசியுள்ளது. மற்றவர்களுக்கு ஜனநாயகத்தின் பாதையை நாம் காட்டுகிறோம். அமெரிக்கா அதை நமக்கு சொல்ல வேண்டிய அவசியம் என்ன? இது சந்தேகத்தை ஏற்படுத்தி உள்ளது என்றார் அவர்.

இது குறித்து பதிலளித்த அமெரிக்க செய்தித் தொடர்பாளர், எந்த அடிப்படையில் இதுபோன்ற தகவல்கள் வெளியாகின்றன என்பது தெரியவில்லை. முற்றிலும் தவறான செய்திகள் இந்தியாவில் வெளியாகியுள்ளன. இந்த விவகாரத்தில் நாங்கள் தலையிடவில்லை என்று அமெரிக்கா உறுதியான அறிக்கையை வெளியிட்டுள்ளது என அவர் கூறினார்.

கருத்து சுதந்திரத்தை நாங்கள் ஆதரிக்கிறோம். அனைத்து நாடுகளையும், அனைதது்க் கட்சிகளையும் இந்த விடயத்தில் நாங்கள் ஊக்கப்படுத்துகிறோம். அமைதியான போராட்டத்தையும், எதிர்ப்பையும் அனுமதிக்கும் பொறுப்பு அனைத்து ஜனநாயக அரசுகளுக்கும் உள்ளது. அதேசமயம் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் பணியாற்ற வேண்டும் என்றார் விக்டோரியா நூலண்ட்.

# சர்வதேச காலநிலை மாற்றத்தால் பாதுகாப்புக்கு பாரிய அச்சுறுத்தல்

உலகச் செய்திகள்

(ஜெனிவா)

சர்வதேச ரீதியில் ஏற்பட்டுவரும் காலநிலை மாற்றங்களினால் உலக நாடுகளின் பாதுகாப்பு மற்றும் சமாதானத்துக்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகளின் சூழல் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்களுக்கான ஆய்வாளர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

காலநிலை மாற்றத்தினால் பல்வேறு விதமான இயற்கை அனர்த்தங்கள் ஏற்பட்டுவருவதால் மக்களின் வாழ்க்கை முறைகளும் பாதிக்கப்படும் என ஆய்வாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். அத்துடன் மக்களின் இடப்பெயர்வுகள், உணவுப்பற்றாக்குறை உள்ளிட்ட பல்வேறு மனிதாபிமான நெருக்கடிகள் காலநிலை மாற்றத்தால் ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. சோமாலியா உள்ளிட்ட ஆபிரிக்க நாடுகளில் ஏற்பட்டுள்ள வரட்சி உள்ளிட்ட நெருக்கடிகளும் காலநிலை மாற்றங்களின் பாதிப்பு என ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்

# ஜேர்மனி -பிரான்ஸ் கூட்டுமுயற்சி தோல்வி பங்குச் சந்தையில் "யூரோ" வீழ்ச்சி

(பாரிஸ்)

யூரோ நாணயத்தை பயன்படுத்தும் நாடுகளின் கடன் சுமை குறித்து ஜேர்மனி மற்றும் பிரான்ஸ் அதிபர்கள் அவசர ஆலோசனை நடத்தியுள்ளனர்.

இருவரும் இணைந்து வெளியிட்ட அறிக்கையில் எதிர்பார்த்த அம்சங்கள் எதுவும் இல்லாததால் நேற்று முன்தினம் ஐரோப்பிய பங்குச் சந்தைகள் சரிவைக் கண்டன.

யூரோ நாணயத்தை பயன்படுத்தும் 17 நாடுகளின் கூட்டமைப்பில் வலுவான பொருளாதார நாடாக உள்ள ஜேர்மனி முடிவடைந்த காலாண்டில் எதிர்பார்த்த 0.5 சதவீத பொருளாதார வளர்ச்சியை எட்டவில்லை. மாறாக 0.1 சதவீதம் மட்டுமே வளர்ச்சி அடைந்ததாக அந்நாட்டு புள்ளியியல் துறை அறிவித்தது. அதேபோல் பிரான்ஸ் தனது கடன் மதிப்பீட்டுக் குறியீடான AAAயை இழந்து விடும் என தகவல்கள் பரவின. இச்சூழலில் பிரான்ஸ் தலைநகர் பாரிசில் உள்ள அதிபர் மாளிகையில் ஜேர்மனி அதிபர் ஏஞ்சலா மெர்க்கெல்லும், பிரான்ஸ் அதிபர் நிக்கோலஸ் சர்கோசியும் இரண்டு மணி நேர அவசர ஆலோசனை நடத்தினர்.

இத்தாலி நிதியமைச்சர் கிலியோ ட்ரமொன்டி, பிரபல தொழிலதிபர் ஜார்ஜ் சோரஸ் இருவரும் யூரோ பயன்படுத்தும் 17 நாடுகளுக்கும் பொதுவான ஒரு கடன் பத்திரத்தை உருவாக்குவதன் மூலம் கடன் சுமையில் திணறும் நாடுகள் அதிலிருந்து மீள முடியும் என ஆலோசனை கூறினர்.


ஆனால் ஆலோசனை முடிந்த பின் மெர்க்கெல்லும், சர்கோசியும் இணைந்து விடுத்த அறிக்கையில் 17 நாடுகளுக்கிடையிலான ஒருங்கிணைந்த பொருளாதார நிர்வாகம் உருவானால் தான் கடன் பிரச்னையைத் தீர்க்க முடியும் என்று தெரிவித்தனர்.

அதோடு பொதுவான கடன் பத்திரம் தற்போதைக்கு சாத்தியமில்லை என்று கைவிரித்து விட்டனர். இவர்களின் ஆலோசனையில் எதிர்பார்த்த முடிவுகள் வெளிவராததால் நேற்று முன்தினம் ஐரோப்பிய பங்குச் சந்தைகளில் சரிவு காணப்பட்டது. நாடுகளுக்கிடையிலான பணப் பரிமாற்றத்திற்கு வரி விதிக்க வேண்டும் என்ற பரிந்துரையால் வங்கிகளின் பங்குகளும் சரிந்தன.



பிரேசிலில் இரண்டாம் உலகப் போர் நடந்து 66 ஆண்டுகள் பூர்த்தியை முன்னிட்டு நடந்த விழாவில் ஜனாதிபதி அலெக்சாண்டர் மற்றும் அவரது மகன் நிக்கோலே கலந்து கொண்டனர்.

# விண்வெளியில் ஹோட்டல் அமைக்க முந்தும் ரஷ்யா



(மொஸ்கோ)

விண்வெளியில் முதல் ஹோட்டலை அமைக்கப்போவதாக ரஷ்யா அறிவித்துள்ளது.

இந்த விண்வெளி ஹோட்டலுக்கு "தி கொமர்ஷியல் ஸ்பேஸ் ஸ்டேஷன்" என்று பெயரிட்டுள்ளது ரஷ்யா. இந்த ஹோட்டல் வரும் 2016-ம் ஆண்டு திறக்கப்படும். பூமியில் இருந்து சுமார் 217 மைல் தொலைவில் மிதக்கும் இந்த ஹோட்டலில் 4 அறைகள் இருக்கும். அதில் 7 பேர் வரை தங்கலாம்.

விண்வெளி ஹோட்டலில் இருந்து பூமியைப் பார்க்கும் வகையில் அதில் வசதி செய்யப்படும். இந்த ஹோட்டலில் 5 நாட்கள் தங்க ரூ. 6 கோடியே 64 இலட்சத்து 85 ஆயிரம் செலவாகும்.

இந்த விண்வெளி ஹோட்டலுக்கு சுற்றுலா செல்ல விரும்புபவர்கள் சோயூஸ் ரொக்கெட் மூலம் அங்கு செல்ல வேண்டும். இந்த ஹோட்டல் சர்வதேச விண்வெளி மையத்தை விட வசதியாக இருக்கும் என்று கூறப்படுகிறது. சுற்றுலாப் பயணிகள் தவிர சர்வதேச விண்வெளி மையத்தில் பணி புரியும் விஞ்ஞானிகள் தங்கள் அவசரத் தேவைக்கு இந்த ஹோட்டலை பயன்படுத்திக் கொள்ளலாம். பணக்காரர்கள் மற்றும் விண்வெளியில் ஆய்வு செய்ய விரும்பும் தனியார் நிறுவன ஊழியர்களை மனதில் வைத்துத் தான் இந்த ஹோட்டல் அமைக்கப்படுகிறது.

# துருக்கியில் குண்டுவெடிப்பு எட்டுப் படையினர் உயிரிழப்பு

துருக்கியின் தென்கிழக்குப் பிராந்தியத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் அந்நாட்டுப் படையினர் எட்டுப்பேர் கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. குர்திஷ் ஆயுததாரிகளால் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என துருக்கியின் அரச தரப்பு சந்தேகம் வெளியிட்டுள்ளது.

ஈராக் எல்லையிலுள்ள ஹக்காரி மாகாணத்தில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில், மேலும் பலர் காயமடைந்துள்ளதாக அந்நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. கடந்த மாதம் இடம்பெற்ற மோதலில் 13 துருக்கிப் படையினரும், பல குர்திஷ் ஆயுததாரிகளும் கொல்லப்பட்டதுடன், மூன்று வருடங்களில் இடம்பெற்ற பாரிய மோதலாகவும் இது பதிவாகியிருந்தது. இதேவேளை, குர்திஷ் ஆயுததாரிகளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என துருக்கி பிரதமர் ரைய்ப் ஏர்டோகன் அண்மையில் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது

# பதிவிறக்கப் பெட்டகம்

அந்நியர்களை அடையாளப்படுத்தி, அவர்களது வெளியேற்றத்தில் தான் தம் இருப்பு தூய்மையானதாகவும், சமத்துவத்துடன் கூடிய ஒரு உன்னத பொருளாதார அமைப்பைக் கொண்ட லட்சிய சமுதாயத்தை நிலைநிறுத்துவதாகவும் இருக்கும் என்ற தேசியம் மக்களாட்சியின் பிணி. இதற்கு பலியானவர்களின் எண்ணிக்கைக்கு அளவில்லை.

– நந்தின் அரங்கன

எந்த உறுதிப்பற்றும் பாசிசத்திற்கு அடிப்படையாக அமைய முடியும் என்பது நமது இன்றைய புரிதல். பாசிசத்தின் அடிப்படை கேள்வி கேட்காத பணிவும், முழுமையான நம்பிக்கை ஒப்படைப்பும், பிரக்ஞையற்ற பின்பற்றுதலுமே. அது புரட்சிகர [விடுதலை] கோட்பாடுகளின் மூலமும் கூட நிகழ முடியும். இந்தப் பாசிசத்தை நாம் எதிர்த்து நிற்க அதே வகை பாசிச வழியும் வன்முறையும் கொரூர ஆற்றலும் வேண்டும். நமது எதிர் பாசிசம் அதே அளவு அழிவுகளை விளைவிக்கும். அதை நியாயப்படுத்தும்.

– பிரேம்

தேசிய இனப் போராட்டத்தின் தற்போதைய போக்குன்னு கேட்கிறீங்க. உதாரணமா அஸாமில தேசிய இனப் போராட்டம்னு சொல்றாங்க. அஸாமிலும் நாகலாந்திலும் இந்திய அரசாங்கத்தைத்தான் பிரதான எதிரியாக வரையறுத்திருக்காங்க. ஆனா பீகார், முதலான இடங்களில இருந்து அங்கே இடம்பெயர்ந்த அடித்தள மக்களத்தான் முதலில அடிக்கிறாங்க. இது விதிவிலக்காக இல்லாமல் ஒரு முக்கியப் போக்காவே இருக்கு. காலிஸ்தான் போராட்டத்தில் பீகாரில் இருந்து பஞ்சம் பிழைக்கப்போன கூலிகளை அடித்தார்கள் அப்போது தேசிய இனப்போராட்டமாக நியாயப்படுத்தப்பட்டது. இவர்களை வெல்வது எப்படிங்கிறதுக்கு பதிலாகக் கொல்வது எப்படிங்கிற வங்குரோத்து அரசியலை தேசிய இனப் போராட்டத்தின் ஓர் உத்தியாகப் பார்க்கிறோம். இப்படி ஓர் உத்தியை முன்வைக்கிற ஒரு போராட்டம், தன் அற அடிப்படையை அழித்துக்கொள்கிறது. திரும்ப அந்த அற அடிப்படையை முன்வைக்க முடியாது. அந்தத் தவறைத் தவறு என ஏற்றுக் கொண்டு அதைச் செய்ததற்காக ஒரு பெரிய தியாகத்தை மனமுவந்து ஏற்றுச் செய்யும்போதுதான் அந்த அறம் திருப்பிக் கிடைக்கும் வாய்ப்புண்டு. இதைத்தான் நாம் வரலாற்றில் பார்க்கிறோம்.

– நாகார்ஜுனன

நாம் இப்பொழுது நடுத்தர வர்க்கமாய் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆனால் உலகிலேயே உடல் சித்திரவதைக்கு ஆளானவர்கள் அதிகம் பேர். ஒரு போர் நடக்கும்போது அங்கே பத்தாயிரம் அல்லது இருபதாயிரம் பேர் மிக இலகுவாய் இறந்து விடுகின்றனர். குஜராத், திபெத் இங்கெல்லாம் தொடர்ந்து கொத்து கொத்தாய் மக்கள் இறந்து கொண்டிருக்கின்றனர். இதைத்தவிர தனிமனித வன்முறை அதிகமாய் நடந்துகொண்டிருக்கிறது. ஒரு மனித உடலை இன்னொரு மனிதன் சிதைப்பதென்பது தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டே உள்ளது. ஆயுதங்களுக்கு செலவு செய்யும் பணம்தான் உலகிலேயே அதிகம். இங்கே தயாரிக்கக்கூடிய வெடிகுண்டுகள் இந்த உலகத்தைப் போன்ற இருநூறு, முன்னூறு உலகங்களை அழிக்கவல்லது. இது தெரிந்தும் நாம் இதை தயாரித்து வைத்திருக்கிறோம். இதெல்லாம் எதற்காக? ஓர் நாட்டில் இராணுவம் என்பது எதற்காக இருக்க வேண்டும்? இராணுவ வீரன் என்ன செய்கிறான்? தேசத்தை பாதுகாக்கிறான் எனில் என்ன அர்த்தம்? எதிர் வீரனை சுடுகிறான் என்றுதானே அர்த்தம். அவனிடமிருந்து இந்த வீரன் தம்முடைய நிலத்தை அபகரிப்பதை தடுக்கிறான். ஏன் அவன் அடுத்தவன் நிலத்தை அபகரிக்கிறான்? அந்த மனம் ஏன் வருகிறது? அந்த நிலம் இல்லையென்றால் அவனைக் கொன்று அந்த நிலத்தை பிடுங்கிக்கொள்கிறான். ஒரு குழந்தையின் காதில் இருக்கக் கூடிய தோடு தேவைப்படுமானால் அவள் காதை அறுத்து அதை எடுத்துகொள்கிறான். மனித மனதின் அடிப்படையிலேயே ஒரு குரூரம் பதிவடைந்து விட்டது. நம் கல்வி முறைகளிலேயே அந்த குரூரம் கற்பிதம் செய்யப்படுகிறது. ஏன் விட்டுக்கொடுப்புகள் இல்லாமல் போகிறது? நாம் தேசப்பற்று என்கிறோமே அது என்ன?

அதில் எவ்வளவு வன்மம் இருக்கிறது. நம் வன்மத்தை தீர்க்கத்தானே இராணுவத்தை வைத்திருக்கிறோம். துப்பாக்கி என்பது என்ன? அதன் வேலை என்ன? உயிரை எடுப்பது மட்டுமே. ஒரு உயிர் உருவாக்குவதென்பது அவ்வளவு இலகுவா என்ன? அது எவ்வளவுகாலம் போற்றி பாதுகாக்கவேண்டும். அதற்கும் உணர்வுகள் உண்டு. அழுகை, கண்ணீர், சந்தோசம், அற்புதம், பார்வை இந்த உணர்வுகளைக் கொண்ட ஒரு உயிரை எப்படி உன்னால் கொல்லமுடிகிறது. இப்படி உயிரை எடுக்கக் கூடிய ஒரு கருவியை தேசபக்தி எனும் பெயரில் உருவாக்கிக் கொண்டு இருக்கிறோம்.

– சாரு நிவேதிதா

மக்கள் பிழை செய்து வன்முறையாக மாறும்போது அவர்களின் அடிப்படைகள் தகர்ந்து நீதியுணர்வை இழந்து வீழ்ச்சியடைவது நிரூபிக்கப்பட்ட உண்மை என்பதை நாம் அறிவோம்.

– மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி

# வலிகாமம் வலயப் பாடசாலைகளின் ஆங்கில தினப் போட்டி முடிவுகள்

(மருதனார்மடம்)

வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட சங்கானை, சண்டிலிப்பாய், உடுவில், தெல்லிப்பளை கோட்ட பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட ஆங்கில மொழித் திறன் போட்டி முடிவுகள் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரனால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெறற மாணவர்கள் விபரம் வருமாறு-

**சொல்வதெழுதுதல்**

**தரம் -13**

எஸ்.சஜீவன் (யாழ்ப்பாணக் கல்லூரி), ஜெ.அர்ச்சுனா (உடுவில் மகளிர் கல்லூரி), ரி.பிரிந்தாஜினி (இளவாலை கன்னியர்மடம் மகாவித்தியாலம்), எஸ்.துவாரகன் (வயாவிளான் மத்திய மகாவித்தியாலம்).

**வாசிப்பு**

**தரம் -03**

ஏ.மதுசாஜினி (இளவாலை கன்னியர் மடம் மகாவித்தியாலம்), சி.வர்ணதீபா (யாழ்ப்பாணக் கல்லூரி), ஏ.ஆர்.நிஷாரா (உடுவில் மகளிர் கல்லூரி).

**தரம் -04**

ஆர்.கீர்த்தனா (யாழ்ப்பாணக் கல்லூரி), என். தர்மிகா (உடுவில் மகளிர் கல்லூரி), பி.கிருஷாங்கி (உடுவில் மகளிர் கல்லூரி).

**தரம் -05**

கே.பவதாரணி (மானிப்பாய் மகளிர் கல்லூரி), ஜி.ராமாஜினி (உடுவில் மகளிர் கல்லூரி), ஏ.மயூரி (யாழ்ப்பாணக் கல்லூரி).

**பேச்சு**

**தரம் -12**

எஸ்.பிரதக்சனா (உடுவில் மகளிர் கல்லூரி), என்.சரண்ஜா (யாழ்ப்பாணக் கல்லூரி), பி.நிலாணி (மானிப்பாய் மகளிர் கல்லூரி), ஜி.மியூரி (யாழ்ப்பாணக் கல்லூரி).

எஸ். சாம்பவி (உடுவில் மகளிர் கல்லூரி), ஆர்.கஜானி (யூனியன் கல்லூரி), எம்.சாம்பவி (யாழ்ப்பாணக் கல்லூரி).

**உடன் ஆயத்தப் பேச்சு**

**தரம் -12**

பி.கமலினிமில்ஸ் (உடுவில் மகளிர் கல்லூரி), என்.கார்த்திகா (பண்டத்தரிப்பு ஜி.எச்.எஸ்).

**தரம் -13**

எஸ்.சாம்பவி (உடுவில் மகளிர் கல்லூரி), எஸ்.வேநிலன் (மகாஜனாக் கல்லூரி), பி.வதனி(இளவாலை கன்னியர் மடம் மகாவித்தியாலம்).

**தனிநடிப்பு**

**தரம் -06**

யாழ்ப்பாணக் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி, அருணோதயாக் கல்லூரி.

**தரம் -07**

யாழ்ப்பாணக் கல்லூரி, மகாஜனாக் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி.

**தரம் -08**

யாழ்ப்பாணக் கல்லூரி, அருணோதயாக் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி.

**தரம் -09**

யாழ்ப்பாணக் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி, அருணோதயாக் கல்லூரி.

**தரம் -10**

மானிப்பாய் மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி, மகாஜனாக் கல்லூரி.

**தரம் -11**

யாழ்ப்பாணக் கல்லூரி, சுதுமலை சின்மயபாரதி வித்தியாயலம், மகாஜனாக் கல்லூரி.

**இசையும் அசைவும்**

**தரம் 1, 2**

உடுவில் மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி, மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாயலம்.

**தரம் 3, 4, 5**

உடுவில் மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி, இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாயலம்.

**நாடகம்**

விக்ரோறியாக் கல்லூரி, பண்டத்தரிப்பு மகளிர் உயர் கல்லூரி.

***மேல்பிரிவு கவிதை***

உடுவில் மகளிர் கல்லூரி, விக்ரோறியாக் கல்லூரி.

**குழுப் பாட்டு**

**தரம் -6, 7, 8, 9**

உடுவில் மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி.


**தரம் 10 -13**

உடுவில் மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி, இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாயலம்.

(தொடரும்......)

---

## நல்லைக்கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு



## தினமுரசு நாளிதழ் நடத்தும்

## மாபெரும் பொது அறிவுப் போட்டி

**பங்குபற்றுங்கள்! பரிசுகளை அள்ளுங்கள்**

1. பொதுவாக ஒருவரின் சொந்த நாட்டை தாய்நாடு என்றே அழைப்பர். ஆனால் அதை 'தந்தையர் நாடு' என அழைத்தவர் யார்?
1) திருவள்ளுவர் 2) பாரதியார்
3) பாரதிதாசன் 4) நீலாவணன்

2. ஈழத்தில் 'மஹாகவி' என்ற புகழ்பெற்ற தமிழ்க் கவிஞரின் இயற்பெயர் என்ன?
1) சின்னத்துரை 2) சுப்பிரமணியம்
3) உருத்திரமூர்த்தி 4) சோமசுந்தரம்

3. தமிழ் செம்மொழி மாநாட்டு பாடலை எழுதியவர் யார்? அதற்கு இசையமைத்தவர் யார்?
1) சுந்தரம்பிள்ளை, எம்.எஸ்.விஸ்வநாதன்
2) அண்ணாத்துரை, எம்.பி.சீனுவாசன்
3) பாரதிதாசன், இளையராஜா
4) கருணாநிதி, ஏ.ஆர்.ரஹ்மான்

4. மல்லிகை பத்திரிகை ஆசிரியர் யார்? அவர் எழுதிய எந்த நூலுக்கு சிறிலங்கா சாகித்திய மண்டல விருது கிடைத்தது?
1) டொமினிக் ஜீவா, தண்ணீரும் கண்ணீரும்
2) ஞானசேகரம், குருதிமலை
3) தெளிவத்தை ஜோசப், காலங்கள் சாவதில்லை
4) செ. கணேசலிங்கன்,. சடங்கு

5. தங்கத் தாத்தா என அழைக்கப்பட்ட ஈழத்து கவிஞர் யார்?
1) விபுலானந்தர் 2) குமாரசாமிப் புலவர்
3) சோமசுந்தரப் புலவர் 3) ஆறுமுக நாவலர்

6. பன்னிரு திருமுறைகள் எத்தனையாம் நூற்றாண்டில் எநத மன்னனின் ஆட்சியில் தொகுக்கப்பட்டது?
1) 10 ஆம் நூற்றாண்டு, ராஜராஜசோழன்
2) 07 ஆம் நூற்றாண்டு, மகேந்திர பல்லவன்
3) 14 ஆம் நூற்றாண்டு, குலசேகர பாண்டியன்
4) 16 ஆம் நூற்றாண்டு, கிருஷ்ண தேவராயர்

7. ஆறுமுகநாவலர் அவர்கள் யாருடைய வேண்டுதலின் பெயரில் 'பைபிளை' தமிழில் மொழிபெயர்த்தார்.
1) சி.வை.தாமோதரம்பிள்ளை
2) தாவீது அடிகளார்
3) பீற்றர் பேர்சிவல் பாதிரியார்
4) மவுண்ட்பேட்டன் பிரபு

8. இசைப்பாடல்களால் அமைந்த வேதம் எது?
1) இருக்கு 2) யசுர்
3) சாமம் 4) அதர்வணம்

9. பத்தாம் திருமுறை எது? அதனை எழுதியவர் யார்?
1) தேவாரம், திருநாவுக்கரசர்
2) கந்தபுராணம், கச்சியப்பர்
3) திருப்புராணம், சேக்கிழார்
4) திருமந்திரம், திருமூலர்

10. அபிராமி அந்தாதியை எழுதியவர் யார்?
1) சோமசுந்தரப் புலவர் 2) சக்திமுற்றப் புலவர்
3) எஸ்.வி.சுப்பையா 4) அபிராமிப்பட்டர்

11. திருக்கோணேஸ்வரப் பதிகம் யாரால் பாடப்பட்டது?
1) திருஞானசம்பந்தர் 2) சுந்தரமூர்த்திநாயனார்
3) கோணேசநாதர் 4) இராவணேசன்

12. 'கற்பக வல்லி நின் பொற்பதங்கள் பிடித்தேன்' என்ற கீர்த்தனையை எழுதியவர் யார்?
1) முத்துசுவாமி தீட்சிதர் 2) அருணாசலக் கவிராயர்
3) வீரமணி ஐயர் 4) இராமலிங்க வள்ளலார்

13. 'மருணீக்கியார்' என்ற பெயரைக் கொண்டிருந்த சமயகுரவர் யார்?
1) திருஞானசம்பந்தர் 2) திருநாவுக்கரசர்
3) மாணிக்கவாசகர் 4) சுந்தரமூர்த்தி நாயனார்

14. இணையற்ற விஞ்ஞானி ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் கண்டு பிடித்த புகழ்பெற்ற கோட்பாட்டின் பெயர் என்ன?
1) வானவியல் கோட்பாடு 2) சார்பியல் கோட்பாடு
3) அளவையியல் கோட்பாடு 4) காந்தவியல் கோட்பாடு

15. 'சினிமா என் சாதனை, வீணை என் ஆராதனை' எனக் குறிப்பிட்ட திரைப்பட இயக்குநரான இசை மேதை யார்?
1) ஜி.என்.பாலசுப்பிரமணியம் 2) ரவிசங்கர்
3) கே.எஸ்.கோபாலகிருஷ்ணன் 4) எஸ்.பாலச்சந்தர்

16. 'லயஞான குபேர பூபதி' பட்டம் பெற்ற தவில் வாத்திய மேதை யார்?
1) வலயப்பட்டி சண்முகசுந்தரம் 2) நடராஜசுந்தரம்
3) தட்சணாமூர்த்தி 4) இணுவில் சின்னராசா

17. யாழ்ப்பாணத்தில் "கலைமகள் சரஸ்வதிக்கு" ஒரு சிறு கோவில் உண்டு. அது அமைந்துள்ள இடம் எது?
1) கீரிமலை 2) கொக்குவில்
3) நல்லூர் 4) அரியாலை

18. அதிகளவில் பக்திப் படங்களை இயக்கி அருட் செல்வர் என்ற பட்டம் பெற்ற இயக்குநர் யார்?
1) கே.பாலச்சந்தர் 2) இராம நாராயணன்
3) பி.மாதவன் 4) ஏ.பி.நாகராஜன்

19. நாரதர், அகத்தியர், இராவணன் மூவரும் ஒரு கலையில் வல்லவர்கள் அக்கலை எது?
1) நாட்டியக்கலை 2) இசைக்கலை
3) சிற்பக்கலை 4) மந்திரக்கலை

20. தினமுரசு தினப்பத்திரிகையாக எப்போதிருந்து வெளிவரத் தொடங்கியது?
1) 2002 ஐப்பசி 01 ஆம் திகதி
2) 2010 ஐப்பசி 01 ஆம் திகதி
3) 1990 மாசி 19 ஆம் திகதி
4) 1993 தை 01 ஆம் திகதி

## நிபந்தனைகள்

- 20 வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.
- ஒவ்வொரு கேள்வியின் கீழும் தரப்பட்டிருக்கும் நான்கு விடைகளில் சரியான விடையின் கீழ் கீறிட வேண்டும்.
- தினமுரசு நாளிதழில் உள்ள இந்தப் படிவத்திலேயே சரியான விடைகளின் கீழ் கீறிட்டு, படிவத்தைக் கத்தரித்து அனுப்பி வைத்தல் வேண்டும்.
- வேறு தாள்களில் எழுதி அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டாது.
- விடைகள் யாவும் இல.373, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கும் அலுவலகத்திலும் அல்லது நல்லூரில் திருவிழாக் காலத்தில் அமைந்திருக்கும் எமது அலுவலகப் பந்தல்களிலும் ஒப்படைக்கலாம்.
- விடைகள் கிடைக்க வேண்டிய கடைசித் திகதி **25.08.2011**
- போட்டி முடிவுகள் நல்லூர்த் தேர்த்திருவிழா அன்று அறிவிக்கப்படும். அன்றைய 'தினமுரசு' நாளிதழில் வெளியிடப்படும். பரிசில்கள் பூங்காவனத் திருவிழா (29.08.2011) அன்று வழங்கப்படும்.
- போட்டி தொடர்பான தனிப்பட்ட கடிதத் தொடர்புகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. தினமுரசு குடும்பத்தின் ஊழியர்கள் எவரும் போட்டியில் பங்குபற்ற முடியாது.
- தகைமை சார்ந்த தேர்வாளர்களின் தீர்ப்பே இறுதிமுடிவாகும்.

**பெயர்** : ..............................................................

**முகவரி** : ..............................................................

..............................................................

**தொ.பேசி இலக்கம்:** .............................. ..............................

**கையொப்பம்**

# ஏழைக் குடும்பத்திடம் நிதி சுருட்டல் பிரதேசசபை உறுப்பினரின் சாகசம்

## வலிகாமம் மேற்கில் நடந்தது அநீதி

(யாழ்ப்பாணம்)

யுத்தத்தினால் மிகவும் பாதிக்கப்பட்ட குடும்பம் ஒன்றுக்கு வீடு அமைப்பதற்காக அரசாங்கத்தால் வழங்கப்பட்ட நிதியினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வலி. மேற்கு பிரதேசசபை உறுப்பினர் ஒருவர் ஏமாற்றிப் பெற்றுக்கொண்ட சம்பவம் ஒன்று அராலி மேற்கில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, இறுதிக்கட்ட யுத்தத்தின் போது புது மாத்தளனில் எறிகணை வீழ்ந்து தனது ஒரு கண்ணை இழந்த பெண்ணொருவர் தனது மன நிலை பாதிக்கப்பட்ட கணவரு டன், இரண்டு மாதக் குழந்தையு டனும் அராலி மேற்கில் வசித்து வருகின்றார்.

இவர்களுக்கு வீடு அமைப்பதற்காக அரசாங்கத்தால் வழங்கப்படும் மூன்று இலட்சத்து 25 ஆயிரம் ரூபா உதவி கிடைத்துள்ளது. வீட்டின் கட்டட வேலையினை பாதிக்கப்பட்ட இக் குடும்பத்தினர் குறிப்பிட்ட பிரதேசசபை உறுப்பினரிடம் கையளித்துள்ளனர்.

பணத்தினைப் பெற்றுக்கொண்ட பிரதேசசபை உறுப்பினர் வீட்டு வேலையினை ஆரம்பித்து இடைநடுவில் கைவிட்டதுடன், நிதியினையும் கையாடல் செய்துள்ளார். அத்துடன், மேலதிகமாக அவர்கள் தமது சொந்தப் பணத்தில் இருந்தும் 25ஆயிரம் ரூபாவை இவரிடம் இழந்துள்ளனர்.

வீட்டுத் திட்டப் பணிகளைக் குறிப்பிட்ட காலத்துக்குள் முடிவுறுத்துமாறு பிரதேச செயலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் பணத்தினை இழந்த குடும்பத்தினர் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

பல தடவைகள் அவரிடம் சென்று இவர்கள் பணத்தினைக் கேட்டபோதும் 'புலி' முத்திரை குத்தி அவர்களை குறிப்பிட்ட பிரதேசசபை உறுப்பினர் அச்சுறுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# தமிழக மீனவர் பிரச்சினை திரைப்படமாகின்றது



(சென்னை)

தமிழக மீனவர்கள் படும் பாடுகளை திரைப்படமாக உருவாக்குகிறார் மணிரத்னம். இந்தப் படத்துக்கான கதை வசனத்தை எழுத்தாளர் ஜெயமோகன் எழுதுகிறார்.

இந்தப் படத்தில் ஹீரோ, ஹீரோயின் என அனைவரும் புதியவர்களே. ஏ.ஆர் ரஹ்மான் இசையமைக்க, ராஜீவ் மேனன் ஒளிப்பதிவு செய்கிறார். இந்தப் படத்தை முழுக்க முழுக்க கன்னியாகுமரி மற்றும் இராமேஸ்வரக் கடற்கரைகளில் படமாக்கப்படவுள்ளது.

# உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் நியமனம் துணுக்காயில் கல்வி அபிவிருத்தி துரிதம்

(நெல்லியடி)

துணுக்காய் கல்வி வலயத்தில் நீண்டகாலமாக நிரப்பப்படாது இருந்த உதவிக் கல்விப் பணிப்பாளர்களுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்பட்டுள்ளதாக கல்வி வலயத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த வலயத்தில் 6 பாடங்களுக்கு உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் இல்லாத நிலையில் தற்போது வடமாகாண கல்வியமைச்சின் செயலாளரினால் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளது.

இதில், மாங்குளம் மகா வித்தியாலயத்தில் பிரதி அதிபராகக் கடமையாற்றிய க.சக்திதரன் முறைசாராக் கல்விக்கும், முன்னர் வலயத்தில் ஆசிரிய ஆலோசகராகக் கடமையாற்றியவர்களான திருமதி கிருபாகரன் கௌரிபுத்திரி தமிழ் பாடத்திற்கும், தே.நவரட்ணராஜா விஞ்ஞான பாடத்திற்கும், திருமதி ஆர்.பத்மநாதன் ஆரம்பக் கல்விக்கும், எஸ்.ரவீந்திரகுமார் கணித பாடத்திற்கும், எஸ். ரவீந்திரன் உடற்கல்விப் பாடத்திற்கும் நியமிக்கப்பட்டுள்ளனர். (12)

# பஸ் நிலையத்திற்கு புதிய கட்டடம்

மண்டைதீவின் பஸ் போக்குவரத்துப் பாதையில் பஸ் தரிப்பிடமொன்று புதிதாக அமைக்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். முதன் முதலாக இதுவரை காலத்தில் பொதுமக்களின் நலன்கருதி அமைக்கப்பட்டுள்ள தரிப்பிடமாக இது கொள்ளப்படுகிறது.

இந்தக் கிராமத்தின் கிழக்கே அம்மன் கோவில் சந்தியில் இருந்து கிழக்காகச் செல்லும் வீதியில் உள்ள வேப்பந்திடல் சந்தியில் முத்துமாரி தேவஸ்தானத்திற்கு அருகாக இந்த நிலையம் அமைக்கப்பட்டு பாவனைக்காக அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

மண்டைதீவு 1ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கனகசபை நடராசா என்பவரது ஞாபகார்த்தமாக இந்த பஸ் தரிப்பிடம் அமைக்கப்பட்டுள்ளதென்பது குறிப்பிடத்தக்கதாகும். (23)

# வீதிகளைச் செப்பனிடுங்கள் அரியாலை மக்கள் கோரிக்கை

(அரியாலை)

அரியாலைப் பகுதியில் மழை காலத்தில் வீதிகளில் நீர் தேங்கி நின்று வீதியால் பயணிப்போருக்கு பெருத்த சிரமத்தையும் அசௌகரியத்தையும் ஏற்படுத்தி வருவதால், மழை நீர் ஓடமுடியாது தேங்கி நிற்கும் பகுதிகளை பொருத்தமான முறையில் சீரமைப்பதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனப் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கனகரத்தினம் வீதிச் சந்தியில் இருந்து கிழக்குப் பக்கமாகச் செல்லும் கிழக்காக உள்ள வீதியில் மழை நீர் தேங்குவதால் இந்த வீதியின் கழிவு நீர் வாய்க்காலை மாரி காலத்திற்கு முன் செப்பனிட்டுத் தருமாறு அந்தப் பகுதிமக்கள் நல்லூர் பிரதேச செயலகத்திற்கு கையொப்பங்கள் இட்டு கடிதம் அனுப்பி வைத்துள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த வீதி சந்தியில் இருந்து மேற்காக செல்லும் சென்.பெனடிற் வீதியும் மாரி காலத்தில் மழை நீரால் மூடப்பட்டுக் காணப்படுவதாகவும், அந்த வீதி நீர் வடிந்து செல்ல ஏற்பாடுகள் செய்து தருமாறும் அந்தப் பகுதி மாநகரசபை மற்றும் பிரதேச செயலகத்திற்கும் கோரிக்கை விடுத்துள்ளனர் என்று மேலும் தெரிவிக்கப்படுகிறது. (23)

# ஆயிரம் பாடசாலை அபிவிருத்தி மேலும் 08 பாடசாலைகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் ஆயிரம் பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்வதற்கு மேலும் எட்டுப் பாடசாலைகளுக்கு வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி அனுமதியளித்துள்ளதாக வடமாகாண கல்வித்திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் ஏற்கனவே இத்திட்டத்தின் கீழ் 112 பாடசாலைகள் அபிவிருத்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. இருந்தும் வடமா காண ஆளுநரின் அனுமதியின் பிரகாரம் தற்போது மேலும் எட்டுப் பாடசாலைகள் அடங்கலாக 120 பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதாகவும் மேலும் அவ் அதிகாரி தெரிவித்தார். (பா)

# மீள்குடியேறிய குடும்பங்களுக்கு புதிய வீடமைப்புத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

வடக்கில் இடம்பெயர்ந்து மீள் குடியேறிய 1000 குடும்பங் களுக்கு புதிய வீடமைப்புத் திட்டம் வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சும், மீள் குடியேற்ற அமைச்சும் இணைந்து இத்திட்டத்தை விரைவில் ஆரம்பிக்கவுள்ளன.

இதற்கான உடன்படிக்கை நேற்று முன்தினம் கைச்சாத்திடப்பட்டது. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களில் தலா 200 வீடுகள் வீதம் இவ்வருட இறுதிக்குள் அமைக்கப்படவுள்ளன.

ஒரு வீட்டிற்கு தேசிய வீடமைப்பு அதிகாரசபை 2 இலட்சம் ரூபா கடனுதவியாகவும் மீள் குடியேற்ற அமைச்சு ஒரு இலட்சம் ரூபா நிதி உதவியாகவும் வழங்கவிருக்கின்றது.

மகிந்த சிந்தனையில் உள்ள 10 இலட்சம் வீட்டுத் திட்டத்திற்கு மேலதிகமாக இத்திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

## குப்பைக்குள் இட்டு கொழுத்திய கொடுமை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி-அக்கராயன் குளம் பகுதியில் குழந்தையொன்றைத் தீ மூட்டி எரித்த தாய் ஒருவர் பொலிஸாரர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி பகுதியில் வசித்து வரும் மூன்று பிள்ளைகளின் தாயான இவர் தான் பெற்றெடுத்த குழந்தையை குப்பைக்குள் போட்டு தீ மூட்டிக் கொழுததியுள்ளார். இவர் நேற்றுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

## ஐ.நா.உதவி....

புக்களை நாம் கூடுதலாக எதிர் பார்த்து காத்திருக்கிறோம் என இலங்கைக்கான ஐ.நா. மனித நேய இணைப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

இம்முறை உலக மனிதாபிமான தினத்தின் தொனிப்பொருள் "மக்களுக்கு மக்கள் உதவுதல்" எனவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நிவாரண அமைப்புகளுக்காக வேலை செய்பவர்கள் மட்டுமன்றி சகலரும் மனிதநேயப் பணியாளர் ஆகலாம். ஒரு சமூகம் நெருக்கடிகளால் பாதிக்கப்படுகையில், நெருக்கடியைத் தொடர்ந்து சமூகத்தில் உள்ளவர்களே சமூகத்திற்கு முதலில் உதவி செய்கிறார்கள் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# முல்லையில் தேர்தல் தீவிர பரிசீலனையில்

(கொழும்பு)


முல்லைத்தீவு மாவட்டத்தில் எஞ்சியுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடாத்துவதற்கான சாத்தியங்கள் குறித்து தீவிர பரசீலனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இம் முயற்சியின் ஒரு கட்டமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் தொடர்பாக அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் மகிந்த தேசப்பிரிய முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.பத்திநாதனிடம் கோரியுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ளூராட்சி சபை தேர்தல் நடத்தப்படாதிருக்கும் புதுக்குடியிருப்பு மற்றும் மரிடைம்பற்று ஆகிய பிரதேச சபைகளுக்கு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதி தேர்தல் நடாத்துவதற்… சாத்தியப்பாடு தொடர்பில் ஆராயும் முகமாகவே தேர்தல் ஆணையாளர் இவ்வறிக்கையை முல்லைத்தீவு அரச அதிபரிடம் கோர்ரியுள்ளார்.

## செய்திப்பாணம்

**அடையாளம் தெரியாத அநாமதேயம் என்பதுண்மை**
**விடைகொடு 'மர்மகிறீஸ்' விண்ணாணம் - படைப்பதில்**
**மர்மமாய் மனிதனில்லை மனிதனாக உருவகிக்கும்**
**தர்மாவேசம் என்பதே தனி!**



# தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வேண்டும்

## ஆசிரியர் தொழிற்சங்கம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்வி வலயங்களைச் சேர்ந்த இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவர், செயலாளர்களுக்கான கூட்டமொன்று கடந்த 16 ஆம் திகதி யாழ். பெரியபுலம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

இலங்கை ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி வன்னிப் பிரதேசத்தில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்குப் போக்குவரத்து உட்பட சகல வசதிகளையும் வழங்கப்பட வேண்டும், 5 வருடங்களுக்கு மேலாகத் தொண்டராசிரியராகக் கடமையாற்றியவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவேண்டும்,

தற்போது உதவி ஆசிரியர்களாகக் கடமையாற்றுபவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும். கஷ்டப் பிரதேசங்களில் 5 வருடங்கள் கடமையாற்றுபவர்களுக்கும் அதிகஷ்டப் பிரதேசங்களில் 4 வருடங்கள் கடமையாற்றுபவர்களுக்கும் இடமாற்றம் வழங்கப்படவேண்டும் என தீர்மானம் எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இம்மாத இறுதிப்பகுதியாக இருந்த ஆசிரியர்களுக்கான இடமாற்றத் திகதி எதிர்வரும 9 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது என இக்கூட்டத்தில வடமாகாண கல்விப் பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்டது. (12)

# எரிபொருள் நிரப்பு நிலையங்கள் வடக்கில் அமைக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் புதிய எரிபொருள் நிரப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளது. பெற்றோலிய வளதுறை அமைச்சின் கீழ் முல்லைத்தீவில் 6 எரிபொருள் நிலையமும், யாழ்ப்பாணத்தில் 4 எரிபொருள் நிலையமும், கிளிநொச்சியில் 4 எரிபொருள் நிரப்பு நிலையமும், மன்னாரில் ஒரு எரிபொருள் நிரப்பு நிலையமும் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (121)


# மலையாள புரத்தில் புதிய பாடசாலை



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மலையாள புரத்தில் 106 ஆவது பாடசாலையாக திருவள்ளுவர் வித்தியாலயம் எனும் பெயரில் புதிய பாடசாலை ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளது. தலா 50 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள இப்பாடசாலைக் கட்டடத்திற்கான அடிக்கல்லை நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான முருகேசு சந்திரகுமார் நேற்றுக்காலை நாட்டி வைத்தார். (29)

# குடும்பப் பெண் தற்கொலை முயற்சி



(மருதனார்மடம்)

அலரி விதை உட்கொண்டு தற்கொலை முயற்சியில் ஈடுபட்ட யுவதி ஒருவர் யாழ்போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று மதியம் 1.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இச் சம்பவத்தில் மருதனார் மடம் பகுதியைச் சேர்ந்த கணேசலிங்கம் புஸ்பகலா (வுயது 45) என்பவரே அலரிவிதையை உட்கொண்டு தற்கொலை முயற்சியில் ஈடுபட்டவர். இவர் மூன்று பிள்ளைகளின் தாயார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (எஸ்)

# வடக்கின் மீள்குடியமர்வு சில பகுதிகளில் சாத்தியமில்லை

(கொழும்பு)

வடக்கில் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான பகுதிகள் இன்னமும் உள்ளன. அப்பகுதிகளில் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் இப்போதைக்குச் சாத்தியம் இல்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த பகுதிகளில் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகளை அகற்றும் நடவடிக்கைகள் இன்னும் பூர்த்தியாகாதுள்ள நிலையில் அங்கு மீள்குடியேற்றம் செய்யமுடியாது என அரசாங்கத்தின் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு நேற்றுப் பிற்பகல், அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தலைமையில் அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது. இதன்போது வடககின் மீள்குடியேற்றம் குறித்த கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

"புதுமாத்தளன், முள்ளிவாய்க்கால் போன்ற பிரதேசங்களிலேயே இறுதிக்கட்ட யுத்தம் நடைபெற்றது. இதனால் அப்பகுதிகள் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருந்த பகுதிகள் என மதிப்பிடப்பட்டுள்ளன.

இதேவேளை, குறித்த பகுதிகளில் விடுதலைப் புலிகள் இயக்கத்தினரால் புதைக்கப்பட்டுள்ள நிலக் கண்ணிவெடிகளை அகற்றும் நடவடிக்கைகள் இன்னமும் பூர்த்தியாகவில்லை. இந்நிலையில் அப்பகுதிகளில் மக்களை மீள்குடியேற்றுவது தற்போதைக்கு சாத்தியமாகாத விடயமாகும்.

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த மக்களின் 95 வீதமானவர்கள், அவர்களது சொந்த இடங்களில் மீள் குடியேற்றம் செய்யப் பட்டுள்ளனர். எஞ்சியுள்ள 5 வீத மாலவர்கள் இன்னமும் தற்காலிக முகாம்களிலேயே தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# வன்னியில் சேவாலங்கா அரை நிரந்தர வீடுகள் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

வவுனியா வடக்கு நெடுங்கேணிப் பகுதியிலும் முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் பகுதியிலும் மீள்குடியேறிய ஒரு தொகுதி குடும்பங்களுக்கு அரைநிரந்தர வீடுகள் மற்றும் அவற்றிற்கான மலசல கூட வசதிகள் என்பன சேவாலங்கா நிறுவனத்தால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருப்பதாக அந்நிறுவன அதிகாரி கேசவன் தெரிவித்துள்ளார்.

குறித்த பகுதிகளில் மீள் குடியேறிய குடும்பங்களுக்கான 580 அரை நிரந்தர வீடுகளும் 488 அரைநிரந்தர மலசல கூடங்களும் 72 சேதமடைந்த மலசல கூடங்கள் என்பன அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அதுதவிர இக்குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நடவடிக்கையின் ஒரு கட்டமாக 105 குடும்பங்களுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்களும் வழங்கப்பட்டுள்ளதாகவும் கேசவன் குறிப்பிட்டார். (பா)

## இனம் காணப்படாத நோயால் மரணங்கள் அதிகம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வைத்தியசாலைகளில் தினமும் 950 பேர் மரணமடைகின்றனர். இவற்றில் இருதய நோய்காரணமாக 29.6 வீதமும், இனம் காணப்படாத நோய்களால் 71 சதவீதமான மரணங்கள் இனம் காணப்படாத நோய்களால் ஏற்படுவதாகச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இனம் காணப்படாத நோய்களைத் தடுக்க சுகாதார அமைச்சால் புதிய வேலைத்திட்டம் ஒன்று மேற்கொள்ளப்படவுள்ளது எனத் தெரியவருகின்றது.

# வலி. வடக்கு மாவைக் கலட்டி கிராமத்தில் காசுக்கான வேலைத்திட்டம் ஆரம்பம்

## சுறுசுறுப்புடன் மக்கள் பங்கேற்பு



(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு தெல்லிப்பளை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மாவை கலட்டி கிராம அலுவலர் பிரிவில் காசுக்கான வேலைத்திட்டம் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

கடந்த யுத்த அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்த இக்கிராம மக்களினையும், கிராமத்தினையும் வளப்படுத்தும் வகையில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரினால் இத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

வலி. வடக்குப் பிரதேச செயலர் எஸ்.முரளிதரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வடக்கின் துரித மீள் எழுச்சித்திட்டப் பிரதித் திட்டப் பணிப்பாளர் குகதாஸன், வலி வடக்கு உதவிப் பிரதேச செயலர் பிரபாகரமூர்த்தி, ஈ.பி.டி.பி.யின் வலி வடக்கு இணைப்பாளர் அன்பு மற்றும் கிராம அலுவலர் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர், தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்கிவைத்தார். (69)

யாழ்நகரில் 3ஆம் ஆண்டில் காலடிபதிக்கும்
நளினின் புதிய காட்சியறை
19.08.2011 முதல் யாழ் நகர் லக்சன் பிளாசாவில்
NALIN Information Technologies Pvt Ltd.
NALIN CITY SHOW ROOM
Authorized Business Partner
hp TP-LINK metropolitan Canon Debug EPSON
356,Luxan Plaza, Kasthuriyar Road, Jaffna. www.nit.lk nalin@nit.lk Tel: 021 222 0838/ 0777667975 Fax: 021 222 4994
(C/875)
எம்மோடு தோளோடு தோள்நின்று உழைத்த அன்பர்கள், வாடிக்கையாளர்கள்,
நண்பர்கள், விற்பனைப்பங்காளர்கள், ஊழியர்கள் அனைவருக்கும் எம் மனமார்ந்த நன்றிகள்

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 ஓகஸ்ட் 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.